Registered as a Newsp...

விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

## யாழ். தபாலில் வந்த பணம் காவல் ஊழியரால் கையாடல்

யாழ். தபால் சேவை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. மோசடி ஒன்று அம்பலமானதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. கொழும்பு மத்திய தபால் தரம்பிரிக்கும் நிலையத்தில் யாழ். குடாநாட்டிற்கு கப்பலில் அனுப்பப்படும் தபால்களை சோதிக்கும் வேலைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை காவலில் ஈடுபட்டிருந்த காவல் துறையினர் வெளி (6-ம் பக்கம் பார்க்க)

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | வைகாசி 30 | 13 - 06 - 94 | திங்கட்கிழமை | ஓசை 115

# முன்னேற முயன்ற இராணுவத்தின் முயற்சி புலிகளால் முறியடிப்பு

## இன்று மக்கள் அஞ்சலிக்கு பேராசிரியர் பூதவுடல்

யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசவின் பூதவுடல் இன்று இரவு ஒன்பது மணி முதல் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

இன்று இரவு ஒன்பது மணிக்கு வந்து சேரும் துணைவேந்தரின் பூதவுடல் நாளை காலை பத்து மணி வரை கைலாசபதி கலையரங்கில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும். இதனைத் தொடர்ந்து பதினொரு மணியளவில் அஞ்சலி உரை நடைபெறவுள்ளது.

## பத்தமேனி – கதிரிப்பாயில் கடும் மோதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை பத்தமேனி, கதிரிப்பாய் ஊடாக முன்னேற முயன்ற இராணுவத்தினரின் முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது. விமானப் படையின் உதவியுடன் டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் வெளியேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பலத்த தாக்குதலைத் தொடர்ந்து இழப்புக்களுடன் அவர்கள் பின்வாங்கினர்.

நேற்றுக் காலை 6.20 மணியளவில் பலத்த எறிகணை வீச்சு, பீரங்கித் தாக்குதல்களை நடத்தியவாறு பத்தமேனி, கதிரிப்பாய் ஊடாக நான்கு டாங்கிகள், இரு பவல் கவச வாகனங்கள் சகிதம் இராணுவத்தினர் முன்னேற முயன்றனர்.

இராணுவத்தினரின் இம் முயற்சிக்கு சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த ஒரு உலங்கு வானூர்தியும் குண்டு வீச்சு விமானமும் உதவியாகத் தாக்குதலை நடத்தின.

இவ்வாறு வெளியேறிய இராணுவத்தினர் மீது அவர்களது காவலரண்களில் இருந்து சுமார் 500 யார் தொலைவில் வைத்து விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல்தொடுத்தனர். சுமார் இரண்டு மணித்தியாலயங்கள் நடைபெற்ற இத் தாக்குதலின் பின்னர் 8.30 மணியளவில் இழப்புக்களுடன் இராணுவம் பின் வாங்கியது.

இம் மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

## இறுதிசடங்குகளை கவனிக்க விசேட குழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் துரைராசாவின் இறுதிச் சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கும் ஏனைய அஞ்சலி நிகழ்வுகள் குறித்த ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கும் கல்விமான்களைக் கொண்ட விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

நேற்று யாழ். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் தலைமையில் யாழ்.பல்கலைக் (6ஆம் பக்கம் பார்க்க)

## பேராசிரியர் மறைவினால்

## பொதுக் கூட்டம்

# குருநகர் சந்தைப் பகுதியில் நேற்று மக்கள் கூட்டம் மீது எறிகணை வீச்சு

## மூவர் பலி, 3 க்கும் மேற்பட்டோர் காயம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் தொடர்மாடி சந்தைப் பகுதியை நோக்கி மண்டைதீவில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல் மேற்கொண்டதில், மூவர் கொல்லப்பட்டனர். 30 ற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 8.30மணியளவில் மேற்படி சந்தைப் பகுதியில் மீன் வியாபாரம் சூடுபிடித்திருந் வேளையில் இந்த எறிகணைப் பிரயோகம் இடம் பெற்றது

தொடர்ச்சியாக குருநகர்ப் பகுதியை நோக்கி நான்கு எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன.

முதலில் ஏவப்பட்ட எறி...

வீழ்ந்து வெடித்தது மற்றைய இரண்டும் கடற்கரையை அண்டியபகுதியில் விழுந்து வெடித்தன.

சந்தைப் பகுதியில் மீன்விற்பனையில் ஈடுபட்டவர்களும், மீன் வாங்கச் சென்றவர்களுமே இத் தாக்குதலில் பாதிப்படைந்தனர்.

இச் சம்பவத்தில்ஸ்தலத்தில் இறந்தவர்என்று கூறப்படுவர் படும் காசிநாதர் என்பவர் படுகாயமடைந்து நூறுயார் தூரம் ஓடி வந்து மூச்செறிந்த நிலையில் நிலத்தில் வீழ்ந்து இறந்தார் இவரது விபரம் தெளிவாகக் கிடைக்கப் பெறவில்லை.

முத்து கேசவநாதன் என்பவர் (வயது 46) கால் ஒன்று உடைந்த நிலையில் மார்...

...தப்பட்ட போது இறந்தார் இவர் மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயைச் சேர்ந்தவர் என தெரியவருகிறது.

மேலும் பொற்பதி வீதி கொக்குவிலைச் சேர்ந்த பிரேமானந்த் (வயது 20) என்பவர் மேற்படி சம்பவத்தில் பலியானார்.

இத் தாக்குதலுக்கு 30 பேருக்கு மேற்பட்ட பொது ( 5 ஆம் பக்கம் பார்க்க )

## குருநகர் பகுதி மக்கள் ஷெல்வீச்சால் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

குருநகர் கரையோரப் பகுதிகளில், சிறிலங்கா இராணுவத்தினரின் தொடர் எறிகணைத் தாக்குதலை அடுத்து பதற்றம் நிலவுகிறது.

நேற்றும், நேற்று முன்தினம் அதிகாலையும் மண்டை தீவுப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் இரவு பகலாக எறிகணைத் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். பல எறிகணைக் குண்டுகள் குருநகரிலும், குருநகரை அண்டிய கரையோரப் பகுதிகளிலும் வந்து வீழ்ந்து வெடித்தன.

மக்கள் அடர்த்தியாக ( 5 ஆம் பக்கம் பார்க்க )

மில்லை.

கொள்ளப்பட்டன.

முதலில் ஏவப்பட்ட எறிகணை கடற்கரைப்பகுதியில் வீழ்ந்து வெடித்தது அடுத்த எறிகணை சந்தைப் பகுதியில்

பவர் (வயது 46) கால் ஒன்று உடைந்த நிலையில் மார்பில் படுகாயமடைந்து யாழ். மருத்துவ மனைக்கு கொண்டு வந்து சிகிச்சைக்கு உட்படுத்

டை தீவுப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா

மக்கள் அடா தது யாக

( 5 ஆம் பக்கம் பார்க்க )

# பேராசிரியர் மறைவினால் பல்கலையில் பூரண துக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவின் மறைவை ஒட்டி இன்று முதல் யாழ் பல்கலைக் கழகத்தில் பூரண துக்கம் அனுஷ்டிக்கப்படும் என யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் அறிவித்துள்ளார்.

இது குறித்து துணைவேந்தர் விடுத்துள்ள செய்தியில் முன்னாள் துணைவேந்தரின் மறைவை ஒட்டி இன்று முதல் அன்னாரின் இறுதிக்கிரியைகள் முடியும் நாள் வரை பல்கலைக் கழகத்தில் பூரண துக்கம் அனுஷ்டிக்கப்படும். இந்நாட்களில் பல்கலைக் கழகக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்படும்.

விரிவுரைகள் நடக்கமாட்டாது இறுதிக்கிரியை நடக்கும் நாள் விடுமுறை நாளாக இருக்கும் எனவும் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுளது.

## பொதுக் கூட்டம்

யாழ் பல்கலைக்கழக அனைத்து பீட மாணவர்களுக்குமான பொதுக் கூட்டம் இன்று காலை 9.00 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

## அனுதாபக் கூட்டம்

முன்னாள் யாழ். பல்கலைக் கழகதுணைவேந்தர் அ. துரைராசா அவர்களின் மறைவை பொட்டி ஹாட்லிக் கல்லூரியில் இன்று காலை 9.00 மணிக்கு அனுதாபக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது (யோ)

# கரையோரப் பகுதி நோக்கி இரவு பகல் ஷெல் வீச்சு

[யாழ்ப்பாணம்]

தீவகப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் இரவு வேளை கரையோரப் பகுதிகளை நோக்கி அகோர எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

காரைநகர் மற்றும் மண்டைதீவுப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் கடந்த இரவு 8.30 மணி முதல் நள்ளிரவு வரை இத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இவ் எறிகணைகள் பொன்னாலை, அராலித்துறை மற்றும் பண்ணைப் பகுதி கரையோரங்களில் வீழ்ந்து வெடித்தன.

# விநாயகபுரத்தில் மோதல் இருபோராளிகள் வீரச்சாவு

## மூன்று பொதுமக்கள் சுட்டுக் கொலை

அம்பாறை விநாயகபுரம் பாலக்குடா என்ற இடத்தில் விடுதலைப் புலிகள் போராளிகள் தங்கியிருந்த வேளை அவர்களை சுற்றிவளைத்த சிறிலங்கா விசேட அதிரடிப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

கடந்த 9ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற இம் மோதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை மனோகரன் (கந்தசுவாமி தங்கராசா, அம்பாறை), வீரவேங்கை செங்கோலன் (கண்ணப்பர் நவநாயக மூர்த்தி, அம்பாறை) என்னும் இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## மனிதநேயம் மிக்க சமூகசேவையாளர்

### - துணைவேந்தர் குணரட்ணம்

தலைசிறந்த கல்விமானும் மனிதநேயம் மிக்க ஒரு சமூகசேவையாளருமான பேராசிரியரின் மறைவு யாழ். பல்கலைக் கழகத்திற்கு மட்டுமன்றி தமிழ்ச் சமூதாயம் முழுவதற்குமே பேரிழப்பாகும் இவ்வாறு முன்னாள் யாழ், பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் மறைவு குறித்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரட்ணம் விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது (5ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் கூறும் நல்லுலகம் அதிர்ச்சி அடைந்துள்ளது

### வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம்

சிறந்த கல்விமானும், சிறந்த தேசபக்தரும் எமது தேசத்தின் உயர் கல்விக்காக அரும்பாடுபட்டு உழைத்தவருமான யாழ்ப்பாண பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் திடீர் மறைவு கேட்டு தமிழ் கூறும் நல்லுலகம் ஆழ்ந்த அதிர்ச்சி அடைந்துள்ளது.

எம் நெஞ்சைப் பிளக்கின்ற இத் துயரத்தை எம்மால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இவ் இழப்பானது தமிழீழ தேசத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரி

(6ஆம் பக்கம் பார்க்க)

## தூரதரிசனத்துடன் பணிபுரிந்த பேராசான்

### பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம்

(யாழ்ப்பாணம்)

தூரதரிசன வீச்சுடனும் நம்பிக்கை நிறைந்த திடமான மனத்துடனும் பணியாற்றிய இப்பேராசான் பல்கலைக்கழக வரம்புக்குள் தனது பணியை நிறுத்திக்கொள்ளாது பொதுப்பணியில் அயராது ஈடுபட்டவர் என பேரருட் திரு. கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் தமது அஞ்சலி செய்தியில் தெரிவித்துள்ளார் அதன் விபரம் வருமாறு:

தமிழினத்தின் தலை சிறந்த கல்விமான்களில் ஒருவரும் யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் அழகையா துரைராசா அவர்கள் மரணமான துயரச் செய்தி கேட்டு மிகவும் வேதனை அடைகிறோம்

யாழ்ப்பாணத்தில் அவர் பணியாற்றிய காலம் பல்வேறு இன்னல்களும் இடர்களும் நிறைந்த காலமாகும். தூரதரிசன வீச்சுடனும் நம்பிக்கை நிறைந்த திடமான மனத்துடனும் பணியாற்றிய இப்பேராசான் பல்கலைக்கழக வரம்புகளுக்குள் தனது பணியை நிறுத்திகொள்ளாது பொதுப் பணியிலும் அயராது ஈடுபட்டு உழைத்தவர்.

(6-ம் பக்கம் பார்க்க)



## மக்கள் மனங்களை கவர்ந்த மாமனிதர்

### நல்லை குரு மகா சந்நிதானம்

உபவேந்தர் அ. துரைராசா எல்லோர் உள்ளங்களையும் கவர்ந்து வாழ்ந்த மாமனிதர் என நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் குரு மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் தனது அஞ்சலி அருளுரையில் தெரிவித்தார். அதன் விபரம் வருமாறு:

அன்பு நிறை நெஞ்சத்தீர்,

அமரர் மாண்புமிகு உப வேந்தர் அ துரைராசா அவர்களின் மறைவு

(6-ம் பக்கம் பார்க்க)

## இரவு பகல் பாராது உழைத்த பேராசிரியர்

### - யாழ். மாநகர ஆணையாளர்

''இந்த மண்ணினுடைய மக்களினுடைய வளமான ஆரோக்கியமான எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு இரவு பகல் பாராது உழைத்த ஸ்தாபனம் அவர்'' என யாழ். மாநகரஆணையாளர் விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா அவர்களினுடைய மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்த பல்லாயிரக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பேராசிரியர் சேவை காலத்தால் அழியாதது

### மேலதிக அரச அதிபர்

பேராசிரியர் துரைராசா காலத்துக்கேற்ப முன்னின்று செய்த சமூக மேம்பாடுகள் காலத்தால் அழியாதது என யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம் விடுத்த இரங்கற் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச் செய்தியில் மேலும்;

மாமேதையும் மானிட சேவையாளருமான மறைந்த துணைவேந்தர் திரு. அழகையா துரைராசா அவர்களின் மறைவு தமிழ் பேசும் நல்லுலகிற்கு ஏற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களோடு மக்களாய் தொண்டாற்றியவர்

### யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம்

எத்தனையோ சுகபோகங்கள்கிடைக்கக் கூடிய வசதி இருந்தும் மக்களோடு மக்களாகத் தானும் நின்று சாதாரண ஒரு குடிமகன் பெறும் வசதிகளை மட்டும் அனுபவித்துக் கொண்டு தொண்டாற்றியமை மாணவர் சமுதாயத்தால் மாத்திரம் அன்றி தமிழ் மக்கள் அனைவராலும் போற்றப்பட்ட ஒன்றாகும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அஞ்சலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6 ஆம்பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

**சாரதா**

கலை இலக்கிய சஞ்சிகை. அடுத்த இதழ் கோமல் சுவாமிநாதன் பேட்டியுடன் இலங்கைச் சிறப்பிதழ். எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. (8472)

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறோயிலர்இறைச்சிக்கோழி உடன் விற்பனைக்கு உண்டு. எந்நேரமும் சுத்தம் செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் ஆஷா கோழிப் பண்ணை, 1ம் கட்டை, பருத்தித்துறை. (8523)

**EASY ENGLISH**

ஆங்கிலம் இலகுவில் கற்க, கற்பிக்க T. M அன்ரனிப்பிள்ளை LL. B. எழுதிய ''ஈசி இங்கிலீஸ்'' (EASY ENGLISH PART I - V) தொகுப்பு பெரும் துணைபுரியும். ஆசிரியரின் புதிய வெளியீடாக 'ஈசி லற்றீன் எக்ஸ்பிறசன்ஸ்' (Easy Latin Expressions) ஆங்கிலம், தமிழ்மொழி பெயர்ப்புடன் வெளிவந்துள்ளது. (சி-9637)

**புதிய வகுப்புக்கள்**

YOGI HOME SCIENCE ACADEMY 15 - 6 - 94 புதன்கிழமை முதல் Cookery, Cake Icing, Fondant - Icing Sugar Flowers, Make up and Hair Dressing புதிய வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன. 71 B, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் நல்லூர் (8530)

**'அக்கரைச் சீமையில்' நாவல்**

இங்கிலந்து சென்ற ஓர் அழகிய இளம் தமிழ்ப்பெண்ணுக்கு என்ன நடந்தது? 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை உண்மைக் கதை போலச் சொல்கிறார். பூபாலசிங்கம் புத்தகசாலை. (8411)

**வெற்று பரல்களில் மரம் வளர்க்க திட்டம்**

எமது தேசத்தின் ஒருங்கிணைந்த அபிவிருத்தியையும் இயற்கை வளப்பாதுகாப்பையும் இலக்காகக் கொண்டு வெற்று பரல்களில் மரக்கன்றுகள் வளர்க்கும் திட்டம் ஒன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் நடைமுறைப்படுத்தியுள்ளனர். இந்த வகையில் இவ்வருடம் வெற்று பரல்களில் 4000 ...

---

## இன்று இரவு

இடம்:- கச்சாய் அம்பாள் ஆலய முன்றல்

அரியாலையூர் **V.T.** செல்லாராசாவின்

**பூதத்தம்பி**

கொடிகாமம் A.V.M. போட்டோ புரடெக்ஷன் வழங்கும்

விடத்தல்பளை காசிநாதனின் நெறியாள்கையில்

**சத்தியவான் சாவித்திரி**

புராண இசை நாடகம்

நகைச்சுவை நடிகர் சுமாலியாக நடிப்பவர்

மாணிக்கக் கல் வியாபாரி

**K. P.** திருநாவுக்கரசு அளவெட்டி

(8540)

## பெயர் மாற்றம்

"ஜெயச்சித்ரா நகை மாளிகை"

என்ற பெயரில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் இன்று முதல்

**யமுனா நகையகம்**

என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்,
இ. யோகநாதன்

177, D, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம். (8538)

## வாழ்த்துக்கள்

பாஷையூர் புனித அந்தோனியாரின் அருளாட்சி எங்கும் பரவிட வாழ்த்துகின்றோம்.

**றொசானி தையல் நிலையம்**

சிறந்த தையல் வேலைகளுக்கு முன்னணி ஸ்தாபனம்

807, கடற்கரை வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம். (சி 9650)

B. மெல்றோய்
உரிமையாளர்

---

யாழ். பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர்

பேராசிரியர் அ. துரைராசா

அவர்கட்கு

## எமது கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
10 - 11 - 34

மறைவு
11 - 06 - 94

''நேர்மையின் ஆழம் நடையினில் தெரிய
கடமையின் ஆழம் கண்களில் தெரிய - நும்
பணியின் ஆழம் விவசாய பீடத்தின்
என்றுமே மங்கா வளர்ச்சியில் துலங்கும்''.

பீடாதிபதி,
விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள்
விவசாய பீடம். (8539)

## 31ஆம் நாள் நினைவும் அந்தியேஷ்டி அழைப்பும்

1994 - 06 - 14

தோற்றம் :
1902 - 11- - 07

மறைவு :
1994- 05 - 19



வல்வெட்டித்துறை புன்னையடியை பிறப்பிடமாகவும், தொண்டைமானாற்றை வசிப்பிடமாகவும் கொண்ட.

அமரர் சான்டோ

**ஆறுமுகம் தில்லையம்பலம்**

(மலேயன் பென்சனியர்)

அன்னாரின் அந்தியேஷ்டிக் கிரியைகள் 1994-06-14 செவ்வாய்க்கிழமை அதிகாலை 6-00 மணியளவில் இடம்பெறும். இக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு ...

---

## விற்பனை

எம்மிடம் வீடியோ டெக்குகளுக்கு தேவையான

**வீடியோ ஹெட் (Video head)**

மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகட்கு: **மின்வளம்**

இல. 81, லெப். கேணல் சந்தோசம் தெரு,
(சி-9641) (கஸ்தூரியார் வீதி,) யாழ்ப்பாணம்.

## நினைவு கூருகின்றோம்... 13.06-1994

1985-ம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - புல்லுமலைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த,

**வேல்** (குமாரவேல்-கோப்பாவெளி-மட்டு)

1987-ம் ஆண்டு வல்வெட்டித்துறை-பொலிகண்டி, உப்புக்கிணற்றடிப் பிள்ளையார் கோயிலடியில் சிறிலங்கா இராணுவத்தினரால் உலக்கையால் அடித்துக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன், மற்றும் பலாலி-மாவிட்டபுரம் பகுதிகளில் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்,

1989-ம் ஆண்டு மட்டு-தொப்பிக்கல்மலைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய,

**கேதீஸ்** (- குணசேகரம் - ஏறாவூர்-மட்டு)

1990-ம் ஆண்டு மட்டு-களுவாஞ்சிக்குடியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**தமேஸ்** (- - அக்கரைப்பற்று - அம்பாறை)

**குமரேசன்** (பாலையடிவெட்டை-மட்டு)

**மொனரா** (போகராசா பொற்செல்வன்-மண்டூர்-மட்டு)

**கமலன்** (இ. மூர்த்தி-ராமனூர்-புளியங்குளம்)

**தர்சன்** (அப்துல்காதர்-சம்சி)

**வில்வராஜ்** (தேவராஜா பிறேமரூபன்-கோட்டைக்கல்லாறு-மட்டு)

பாணமையில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஜோன்சன்** (சற்குணம் ஜீவராசா-பொத்துவில்-அம்பாறை)

**குயிலன்** (- - பதுளை)

இறக்காமத்தில் சிறிலங்காவின் விசேட உதவிப் படை தடுப்புமுகாமில் வீரச்சாவெய்திய,

**சாந்தன்** (சண்முகம் முத்துக்குமார் - சேனைக்குடியிருப்பு-மட்டு)

மட்டு-கும்புறுமூலையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**ஜிவ்றி** (முகம்மது இலியாஸ்-மீராவோடை-மட்டு)

**லெப்.றொமி** (நாகராசா சகாதேவராசா-கொடுவாமடு-மட்டு)

அம்பாறை-கல்முனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான ,சமரின்போது வீரச்சாவெய்திய,

**இன்பன்** (- - அக்கரைப்பற்று-அம்பாறை)

**கோமளராஜ்** (- சந்திரசேகரம்-37-ம் கிராமம்-அம்பாறை)

**சதீஸ்** (- - அக்கரைப்பற்று-அம்பாறை)

திருமலை-ஜெயபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.சங்கிலி** (சண்முகதாஸ் சதீஸ்குமார்-திருமலை)

புள்ளனர். இந்த வகையில் இவ்வருடம் வெற்று பரல்களில் 4000 மரக்கன்றுகளை உற்பத்தி செய்து 5 அடிவரை வளர்த்தபின் நடுகை செய்து பராமரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

மரக்கன்றுகளை பெரிதாக வளர்க்கத்தக்கவாறும் பரல்களை மீளவும் பாவிக்கத்தக்கவாறும் பரல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன இதற்காக தற்போது 1000 வெற்று மண்ணெண்ணெய் பரல்கள் எடுத்து அவற்றை நான்காக வெட்டிய பின்பு ஒவ்வொன்றும் சிறிய பரல்களாக உருவாக்கி அதற்குள் மண், மணல் எரு என்பன இட்டு மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

காமதேனு விவசாயப்பண்ணையில்வைத்துநடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இச் செயற்பாட்டில் தற்போது 3000 கன்றுகள் நடுகை செய்யப்பட்டுள்ளன. மீதி 1000 கன்றுகள் நடுவதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

## காரை.முகாமிலிருந்து படையினர் தாக்குதல்

(தொல்புரம்)

காரைநகர் கடற்படை முகாமிலுள்ள படையினர் 10 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் மூளாய், பொன்னாலைப் பகுதிகளை நோக்கி பலத்த எறிகணை வீச்சினை மேற்கொண்டனர்.

சுமார் அரை மணிநேரம் இடம்பெற்ற இத் தாக்குதல் சம்பவத்தின் போது மேற்படி பகுதிகளின் பல இடங்களில் இவ் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன.

மேலும் இதே தினம் மாலை 6.25 மணியளவில் சிறிலங்கா வான் படையினரின் குண்டுவீச்சு விமானம் ஒன்று மேற்படி பகுதிகள் உட்பட சுழிபுரம், வட்டுக்கோட்டை, தொல்புரம் பகுதிகளின் வான்பரப்பில் சுற்றி வட்டமிட்டு சென்றதை அவதானிக்க முடிந்தது. (41)

---

## நீர்ப்பாசன தொழில்நுட்பவியலாளர்கள் உடன் தேவை

தாயக பொருண்மியத்தை வளர்க்கும் நோக்குடன் நாம் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தை அமுலாக்க உள்ளோம். இதை இனிது நிறைவேற்ற எமக்கு பின்வரும் அனுபவசாலிகள் உடன் வேண்டும்,

★ நீர்ப்பாசன பொறியியலாளர்கள்
★ நீர்ப்பாசன தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்
★ நீர்ப்பாசன தொழில் மேற்பார்வையாளர்கள்
★ நீர்ப்பாசன படவரைஞர்கள்

தகைமையுடையவர்களுக்குத் தகுந்த சம்பளம் வழங்கப்படும். பெருநிலப்பரப்பில் வேலை செய்ய தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேலதிக ஊக்குவிப்பு பணமும் கொடுக்கப்படும்,

**உங்கள் அனுபவம் பற்றிய சான்றிதழ்களுடன் எதிர்வரும் வியாழன் 16 - 6 - 94 அல்லது வெள்ளி 17 - 6 - 94 காலை 10 மணிக்கு**

கீழ் உள்ள விலாசத்தில் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

**உக்கட்டுமானப் பகுதி,**
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**

**இல. 10, செம்பியன் வீதி,**
**கொக்குவில்.**

(சி-9649)

---

அன்னாரின் அந்தியெஷ்டிக் கிரியைகள் 1994-06-14 செவ்வாய்க்கிழமை அதிகாலை 6-00 மணியளவில் இடம்பெறும். இக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்புகள் இல்லை.

| | | |
|---|---|---|
| மனைவி | - | தி. ஜானகி அம்மாவும், |
| பிள்ளைகள் | - | மருமக்கள் |
| தங்கரத்தினம் | - | டாக்டர் கு. கிருஷ்ணசாமி |
| ஜீவரெத்தினம் | - | டாக்டர் இ. இரத்தினசபாபதி |
| ஞானலக்ஷ்மி | - | மெம்பர் தி. நவரெத்தினம் |
| ராஜேஸ்வரி | - | டாக்டர் செ. சிவசம்பு |
| புனிதவதி | - | செ. லோகநாதன் |

பிள்ளையார் கோவிலடி, தொண்டைமானாறு. (8531)

---

## 2-ம் ஆண்டுநினைவலைகள்



பிறப்பு
03 - 07 - 1977

வீரச்சாவு
13 - 06 - 1992

### வீரவேங்கை நல்லையா
### (தேவராசா விஜயரஞ்சன்)

விடுதலைக் கனவுடன் வீறுடன் நடந்தவன்
புயலென அவன் போர்க்களம் புகுந்தவன்
தலைவனின் தலைமுறையில் தாயகம் அமைத்திடும்
-மண்மீட்பு போரிலே
மறவேங்கை நல்லையா மாவீரன் ஆனவன்.

13-6-94 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் சகல போராளிகள், நண்பர்கள், உறவினர் அனைவரும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவினால் துயருறும்
குடும்பத்தினர்.

கிருஷ்ணன் கோவிலடி,
பொன்னாலை,
சுழிபுரம். (8516)

---

யின் போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.சங்கிலி** (சண்முகதாஸ் சதீஸ்குமார் -திருமலை)

திருமலை - உப்புவெளி, 3ஆம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா காவல் நிலையத்தின்மீது மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**சுகந்தன்** (விஜயநாதன் ஹோமங்கநாதன் - திருமலை)

திருமலை-கிண்ணியாப்பகுதியில் சிறிலங்கா காவல் நிலையத்தின்மீது மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**அருண்** (சண்முகம் வீரசிங்கம்-பன்குளம் திருமலை)

**சீனு** (சதானந்தன் கலைச்செல்வம் - கிண்ணியா திருமலை)

மாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரின்போது வீரச்சாவெய்திய,

**கப்டன் ஜெகன்** (கணபதிப்பிள்ளை இலட்சுமணன் - பன்குளம் - திருமலை)

அம்பாறை சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் கணவன் மனைவி உட்பட சம்மாந்துறை 4ஆம் கொலனி மத்திய முகாம் பகுதியைச் சேர்ந்த 19 தமிழர்கள். டி.டி.சி. தமிழ்க் கிராமம் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட குழந்தைகள், பெண்கள். சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட அம்பாறை புகையிரத நிலையத்தைச் சேர்ந்த அளவையாளர்.

கல்லோயாவிலிருந்து மட்டக்களப்புக்கு வரும்போது காணாமல்போன மட்டுநகர் புகையிரதநிலைய விடுதிவாசியான தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு யாழ் - வீமன்காமம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்டவெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**லெப். தர்சன்** (பரமேஸ்வரன் சிறிதரன் - சித்தங்கேணி, வட்டுக்கோட்டை - யாழ்.)

**வரோதயன்-வரதன்** (கணபதிப்பிள்ளை பரணிதரன் - துன்னாலை தெற்கு, கரவெட்டி - யாழ்.)

1992ஆம் ஆண்டு இயக்கச்சிப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**பழனித்துரை** (கார்த்திகேசு கேதீஸ்வரன் - முழங்காவில் - பூநகரி)

யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் காரணமாக எமைப் பிரிந்த,

**நல்லையா** (தேவராசா விஜயரஞ்சன் - பொன்னாலை, சுழிபுரம் - யாழ்.)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9651)

# பொருளியல் A/L

# கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்

**Greater Colombo Consumer's Price Index -G. C. C.P.I**

(இச் சுட்டெண் முதல் தடவையாக 1993ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கி ஆண்டறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதனால் இது சம்பந்தமான வினாக்கள் இந்த ஆண்டு பரீட்சையில் இடம்பெறக் கூடும் என்பதனால் மாணவர்கள் இதுபற்றி அறிவது அவசியம்.)

## I

"பொருட்கள் சேவைகளின் சில்லறை விலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களை அளவிடுகின்ற ஓர் குறிகாட்டியே கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண் ஆகும்.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் குறைபாடுகளைக் கருத்திற் கொண்டு குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் 1989இல் இச்சுட்டெண் அறிமுகப்படுத்தப்பட்டது. 1985 ஏப் 86 மார்ச் இல் கொழும்பு பெரும்பாகப் பகுதியில் குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட தொழிற்படை சமூக பொருளாதார மதிப்பீட்டில் இருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு இவ் விலைச்சுட்டெண் கணிப்பிடப்படுகிறது

1989 சனவரி யூன் விலைகளை அடியாண்டு (Base Year) விலைகளாகக் (100) கொண்டு இவ் விலைச்சுட்டெண் கணிப்பிடப்படுகிறது.

இச்சுட்டெண்ணின் கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும் விடயங்களும், அவற்றிற்குரிய எடைகளும் (நிறைகள்) வருமாறு;

| விடயம் (பண்டவகைப்படி) | எடைகள் (நிறைகள்) |
|---|---|
| 1 உணவும் குடிபானமும் | 69. 3 |
| 2 குடிவகை, புகையிலை, வெற்றிலை பாக்கு | 3.8 |
| 3 வீடமைப்பு | 8. 9 |
| 4 எரிபொருளும் வெளிச்சமும் | 5. 4 |
| 5 ஆடையும் காலணியும் | 2. 8 |
| 6 தனியார்கவனிப்பும்நலப்பணிகளும் வீட்டுப் பொருள்களும் பணிகளும் | 4. 9 |
| 7 போக்குவரத்தும் தொடர்பூட்டலும் | 2. 6 |
| 8 பல்வகை | 2.1 |

மொத்தக் கூடைப்பெறுமதி (Basket Value-1989 சனவரி-யூன் விலைகளில்) ரூ 2347 .71 ஆக விளங்கியது

இச் சுட்டெண்ணின் எடைகள் மேற்கூறப்பட்டிருந்த மதிப்பீட்டின்படி (1985-86) கொழும்பு பெரும்பாகப் பகுதியில் செலவு ரீதியாக வரிசைப்படுத்...

## IV

### குறைபாடுகள் - வரையறைகள் - மெலிவுத்தானங்கள்

1. கொழும்பு பெரும்பாகப் பகுதியை மட்டும் மையமாக வைத்துக் கணிப்பிடப்பட்டதால் இது இலங்கை முழுவதையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கொள்ள முடியாது ஏனெனில் நகரக் கொள்வனவுக் கோலமானது கிராமியக் கொள்வனவுக் கோலத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டிருக்கின்றது.

   உதாரணம் : நகரப்பகுதியை விட கிராமியப் பகுதியில் வாடகை, போக்குவரத்துச் செலவு மிகக் குறைவு.

2. அடியாண்டு (1989) உள்நாட்டுக் குழப்பம் நிறைந்த காலப்பகுதியாகும். தெற்கில் J.V.P. கிளர்ச்சியும், வடக்கில் இந்திய இராணுவம் - விடுதலைப் புலிகள் மோதலும் இடம்பெற்ற காலமாகும்.

**வினா 1**

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிற்கு, கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிற்கும் இடையேயுள்ள ஒற்றுமைகள், வேறுபாடுகள் யாவை?

**விடை:**

### ஒற்றுமைகள்

**1 விலைகள்:**

இரண்டும் நுகர்வோர் (சில்லறை) விலைகளின் போக்கினை அளவிடுகின்றன.

**2 கணிப்பிடும் நிறுவனம்:**

இரண்டும் குடிமதிப்புப் புள்ளி விபரத்திணைக்களத்தால் கணிப்பிடப்படுகின்றன.

**3 ஆய்வு மேற்கொண்ட பிரதேசம்:**

இரண்டும் கொழும்பை மையமாக கொண்டிருத்தல்.

**4 வாய்ப்பாடு**

இரண்டும் லாஸ்பெயரின் வாய்ப்பாட்டின்படி (Laspeyer's Formula) கணிப்பிடப்படுகிறது.

$$I = \sum W_o \frac{P_i}{P_o}$$

$P_o$ = அடிப்படை மாதத்திற்குரிய விலை
$P_i$ = நடைமுறை மாதத்திற்குரிய விலை
$W_o$ = குறிப்பிட்ட பொருளுக்கு கொடுக்கப்பட்ட நிறை.

### வேறுபாடுகள்

| வேறுபடுத்தும் அம்சங்கள் | கொ.நு.வி.சு | கொ.பெ.நு.வி.சு |
|---|---|---|
| 1 அடியாண்டு | 1952 | 1989 சனவரி-யூன் |
| 2 ஆய்வுமேற்கொண்ட பிரதேசம்/புவிப்பரப்பு | கொழும்புநகரம் மட்டும்-குறைந்த புவிப் பரப்பு | கொழும்பு பெரும் பாகப்பகுதி-பரந்த புவிப்பரப்பு |
| 3 பண்டங்களின் வகை | 5<br>i உணவு<br>ii உடை iii எரிபொருளும் வெளிச்சமும்<br>iv வாடகை<br>v ஏனையவை | 8<br>(அவற்றைக் குறிப்பிடுக) |

# இலங்கையின் சமூக பொருளாதாரத்தரவுகள்-1993

## மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்

சென்றவாரத் தொடர்ச்சி

| விடயம் | (1982 விலைகளில்) 1993 தொகைமில்.ரூபா | % |
|---|---|---|
| மொத்த மூலவளங்கள் (1+2) | 235016 | 100 |
| 1. மொ. உள்நாட்டு உற்பத்தி (ச.விலை) | 158208 | 67 |
| 2. பொருள்கள் காரணி அல்லாப் பணிகள்இறக்குமதிகள் | 76808 | 33 |
| பயன்பாடு(A+B+C) | 235016 | 100 |
| A நுகர்வு | 139541 | 59 |
| B மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் | 40556 | 18 |
| C பொருள் காரணிகள் அல்லாப் பணிகள் ஏற்றுமதிகள் | 54919 | 23 |

இவற்றில் வீதாசாரத் தரவுகள் முக்கியம். இலங்கையின் மொத்த மூலவளங்களில் உள்நாட்டு மூலவளங்களின் பங்கு 67% வெளிநாட்டு மூலவளங்களின் பங்கு 33% என்பதையும், அந்த மூலவளங்களில் 59% நுகர்விற்கும், 18% முதலீட்டிற்கும் 23% ஏற்றுமதிக்கும் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

## II

### பணம்

#### குறுகிய பணநிரம்பலின் ($M_1$) உள்ளடக்கம்

(குறுகிய பணநிரம்பலின் வீதம்)

| விடயம் | 1980 | 1988 | 1992 | 1993 |
|---|---|---|---|---|
| நாணயம் (சட்ட முறைப்பணம், | 44 | 57 | 54 | 53 |
| கேள்வி வைப்புக்கள் (வங்கிப்பணம்) | 56 | 43 | 46 | 47 |

#### விரிந்த பண நிரம்பலின் ($M_2$) உள்ளடக்கம்

விரிந்த பணநிரம்பலின் வீதம்

| விபரம் | 1985 | 1988 | 1992 | 1993 |
|---|---|---|---|---|
| நாணயம் | 20 | 26 | 21 | 20 |
| கேள்வி வைப்புக்கள் | 19 | 20 | 18 | 17 |
| தவணை, சேமிப்பு வைப்புக்கள் (போலிநாணயம்) | 61 | 54 | 61 | 63 |

**1991 வினா:**

அண்மைக் காலத்தில் இலங்கையிலே பணவழங்கலின் M1 அமைப்பினைச் சுருக்கமாக விபரித்துக் கருத்துரை வழங்குக.

★ **சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயத்தில் நாணயத்தாள்களின் பங்கு (1993இல்) 96 %**

★ **பணப்பெருக்கி**
(பணநிரம்பலிற்கும் நாணயத் தளத்திற்குமான விகிதம்)

$$\text{1993இல்} \frac{\text{பணநிரம்பல்}}{\text{நாணயத்தளம்}} = 2.86$$

## III

### வங்கி

**வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள். பொறுப்புக்கள் ஆகியவற்றின் தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள் - 1993**


(மொத்த வைப்புக்களின் சதவீதம்)

| | | % |
|---|---|---|
| 1. | கையிலுள்ள பணமும் மத்திய வங்கியிலுள்ள பணமும் (நியதிஒதுக்குத்தேவைகளும் உட்பட) | 13 |
| 2. | வெளிநாட்டு நிலுவைகள் | 13 |
| 3. | திறைசேரி உண்டியல்கள் | 9 |
| 4. | கழிவு செய்யப்பட்ட வர்த்தக உண்டியல்கள் | 6 |
| 5. | மொத்தத் திரவ சொத்துக்கள்(1+2+3+4) | 41 |
| 6. | மொத்த முதலீடுகள் | 3 |
| 7. | கடன்களும் மேலதிகப்பற்றுக்களும் | 71 |

**வினா :**

''இலங்கையில் கேள்விவைப்புக்களுக்கு வர்த்தக வங்கிகளின் திரவச் சொத்துக்கள் விகிதம் 1992, இன் 167 சதவீதத்திலிருந்து 1993 இல் 191 சதவீதத்திற்கு முன்னேறிய போதும், மொத்த வைப்புக்களுக்குத் திரவச்சொத்துக்களின் விகிதம் 1992 ஐப்போல 1993 இலும் 40 சதவீதமாகவே மாற்றமின்றி இருந்தது.'' இதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

(4 ஆம் பக்கம் பார்க்க)



# மாணவர் அரங்கு

# அளவையியலும்

i விஞ்ஞானம்

நியமம் கூறும் விஞ்ஞானம் | விபரிப்புவிஞ்ஞானம் | நியமவிஞ்ஞானம்

விளங்கியது

இச் சுட்டெண்ணின் **எடைகள்** மேற்கூறப்பட்டிருந்த மதிப்பீட்டின்படி (1985-86) கொழும்பு பெரும் பாகப்பகுதியில் செலவு ரீதியாக வரிசைப்படுத்தப்பட்ட போது தாழ்ந்த மட்டத்திலிருந்த 40 சத வீத குடும்பங்களின் செலவுப் போக்கை அடிப்படையாகக் கொண்டிருந்தன

## வே. கருணாகரன் B. A.Hons Dip inEd

### கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்

(சனவரி - யூன் 1989 100)

| | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|
| ஆண்டுச்சராசரி | 124.6 | 138.9 | 152.8 | 164.8 |
| ஆண்டுச்சராசரி சதவீதமாற்றம் | | 11.4 | 9.4 | 8.4 |
| புள்ளிக்குப் புள்ளி சதவீதமாற்றம் (டிசம்பருக்கு - டிசம்பர்) | | | 11.5 | 6.9 |

## II

### பயன்பாடுகள்

1. நாட்டின் பொது விலைமட்டத்தை அறிதல்
2. பணவீக்க, பணச்சுருக்க மாற்றங்களை அறிதல் பணவீக்க வீதத்தை கணிப்பிட பயன்படல்.
3. பணத்தின் பெறுமதியை கணிப்பிட பயன்படல்
4. மக்களது வாழ்க்கைச் செலவை, வாழ்க்கைத் தரத்தை அறிதல்.
5. மெய்க் கூலி (சம்பளம்) யை கணிப்பிட பயன்படல்
6. தொழிலாளருக்கு இழிவுக்கூலியை நிர்ணயிக்கவும், சம்பள உயர்வை வழங்கவும் பயன்படல்

## III

### சுட்டெண்ணின் சிறப்பம்சங்கள்

1. தற்காலத்திற்கேற்ற பரந்தளவான விடயங்கள் (8 விடயங்களையும் குறிப்பிடுக)
2. தற்காலத்திற்கேற்ற எடைகள் (நிறைகளை குறிப்பிட முடியுமாயின் குறிப்பிடுக)
3. புவிப்பரப்பளவுகள் கொழும்பு பெரும்பாகப் பகுதிவரை பரந்திருத்தல்.
4. திறந்த சந்தை விலைகள் கவனத்தில் கொள்ளப்படல், கட்டுப்பாட்டு விலைகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.
5. அடியாண்டு (1989) மிக அண்மையானதாக அமைந்திருப்பது.

இத்தகைய சிறப்பம்சங்கள் காரணமாக சில்லறை விலைகளின் உண்மைமிக்க குறிகாட்டியாக இது கருதப்படுகின்றது. அலுவலக ரீதியான (உத்தியோக பூர்வமான) விலைச் சுட்டெண்ணாக கொ. நு. வி. சு. இன் இடத்தை இன்னும் கொ. பெ. நு. வி. சு. எடுத்துக் கொள்ளாவிடினும், இது தொடர்ந்து கணிப்பிடப்பட்டு கொ. நு. வி. சுட்டெண்ணுடன் சேர்த்து வெளியிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | ...வெளிச்சமும் iv வாடகை v ஏனையவை | |
| 4 நிறைகள் உ+ம் ★உணவு ★ உடை ★எரிபொருளும்வெளிச்சமும் ★ கோதுமை மா ,பாண் ★ அரிசி | தற்காலத்திற்கு ஏற்றவையல்ல 61 9 9.4 4. 3 அதிக எடை குறைந்தஎடை | தற்காலத்திற்கு ஏற்றவை 69. 3 2. 8 5. 4 குறைந்தஎடை அதிகஎடை |
| 5 உத்தியோகபூர்வஅந்தஸ்து | உண்டு | இதுவரை இல்லை |

### வினா 2

1993இல்

| விபரம் | ஆண்டுச்சராசரி சதவீதமாற்றம் | புள்ளிக்குப் புள்ளி சதவீத மாற்றம்(டிசம்- டிசம்) |
|---|---|---|
| கொ. நு. வி. சு | 11. 7 | 10. 3 |
| கொ. பெரும்பாக நு. வி. சு | 8. 4 | 6. 9 |

கொ. நு. வி. சுட்டெண்ணுடன் ஒப்பிடுகையில் கொ.பெ.நு.வி.சுட்டெண்குறிக்கின்றவாறு 1993இன் விலைகளிலுள்ள மெதுவான அதிகரிப்பு வீதத்திற்குக் காரணங்கள் எவை?

**விடை**

1 கொ. பெ. நு. வி. சுட்டெண்ணில் **பாணுக்கும் கோதுமை மாவிற்கும் தாழ்வான எடைகள்** வழங்கப்பட்டமை: 1993 இல் கோதுமை மாவினதும், பாணினதும் **விலைகள் அதிகம்** உயர்ந்தமை கொ. நு. வி. சுட்டெண்ணில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியது.

2 கொ. பெ. நு. வி. சுட்டெண்ணில் **அரிசிக்கு உயர்வான எடை** அளிக்கப்பட்டமை: 1993 இல் மேம்பட்ட வேளாண்மை செயலாற்றத்தினால் அரிசி **விலைகள் சிறிதளவு** மட்டுமே அதிகரித்தமை கொ. பெ. நு. வி. சுட்டெண்ணில் சிறிதளவான மாற்றத்தினையே ஏற்படுத்தியது.

**குறிப்பு:** 1992 செப்டம்பர் 30 தொடக்கம் கோதுமை மாவும், பாணும் விலைக்கட்டுப்பாட்டிலிருந்து விலக்சப்பட்டுள்ளது. தற்போது **மருந்து வகைகள் மட்டுமே** விலைக் கட்டுப்பாட்டின் கீழுள்ள விடயமாகும். ஆயினும்

i) கோதுமை மாவின் விலை கூ. மொ வி. நிலையத்தினால் பொதுத் திறைசேரியின் ஒத்திசைவுடன் நிர்ணயிக்கப்படுகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# அளவையியலும் விஞ்ஞானமுறையும்


## பகுதி II

## 1-ம், 2-ம் அலகு

### விஞ்ஞான அறிவு தொடர்ச்சி A/L

விஞ்ஞான அறிவினை, அத்துறைகளின் விடய இயல்பு, கையாளும் விஞ்ஞான முறைகள், பொதுப் பண்பு என்ற அடிப்படையில் பலவடிவங்களாக பிரித்து விளக்குவர். விஞ்ஞானம் ஒரு பரந்த அறிவு என்ற வகையில் அதன் அகலக்குறிப்பு தவிர்க்கப்படாத வகையில், கருத்துக்கள் தழுவாத வகையில் பிரிக்கப்பட வேண்டும். அளவையியலில் வரைவிலக்கணம், பிரிப்புமுறை, வகையீடு என்பன இதனையே வலியுறுத்துகின்றன. பதங்களை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கின்றபோது ஒரு பொதுப் பண்பைக் கையாளவேண்டியது அவசியமாகும். பல சந்தர்ப்பங்களில் இம்மொழி பெயர்ப்புகள் மாணவர்களிடையே குழப்பத்தினை ஏற்படுத்தி விடுகின்றன. உதாரணமாக (Normalive Science) என்ற ஆங்கிலப் பதத்தை தமிழில் பெயர்க்கின்றபோது உயர் நெறி விஞ்ஞானம், நியமம் கூறும் விஞ்ஞானம், உயர்மதிப்பு விஞ்ஞானம், மதிப்பீட்டு விஞ்ஞானம, தூயநெறிசார் விஞ்ஞானம், அனுபவ, விதிசார் விஞ்ஞானம். விடையீ விஞ்ஞானம் என பலவாறு மொழிபெயர்த்துள்ளனர். ஆய்வாளர்கள் அவரவர் துறைசார்ந்த வகையில் மொழி பெயர்த்துவிடுகின்றனர். கடந்த பரீட்சை வினாத்தாளில் ''மேல் வரம்பிட்ட விஞ்ஞானம்'' என்றும் மொழி பெயர்த்துள்ளமை அவதானத்திற்குரியது. இது மாணவர்களின் மத்தியில் மட்டுமன்றி பொதுவான வாசகர்களிடமும் பல குளறுபடிகளை ஏற்படுத்தி விடுகிறது. பொதுப்பட, மெய்யியலாளர்களின் மொழி பெயர்ப்பை பின்பற்றுவதே பொருத்தமானது. மெய்யியல் - அளவையியல் போன்ற அறிவியல்கள் இத்தகைய மொழிசார்ந்த பிரச்சினைகளில் அனுபவம் வாய்ந்த அறிவியல்களாகும்.

எமது மத்தியில் பல அறிவியற்துறைகள் காணப்படுகின்றன துறைகள் ஒன்றோடொன்று தழுவியும் மயங்கியும் காணப்படுகின்றன. கதம்பமாகக் காணப்படும் இத்துறைகளை ஒருகுறிப்பிட்ட கொள்கையின் அடிப்படையில் வகுப்பதும், பிரிப்பதும் வரைவிலக்கணப்படுத்துவதும் அவசியம் அறிவியலின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் இது உதவும். உதாரணமாக பிறப்பியல், உடலியல் உளவியல், சூழலியல், வானியல், காலநிலையியல், புதைபொருளியல், தொல்பொருளியல், பிரயோகப் பொருளியல், இரசாயனவியல், உடற்கூற்றுவியல், சமூகவியல், மானிடவியல், பண்பாட்டுவியல், வரலாறு மருத்துவம், பொருளியல், மெய்ப்பொருளியல் , கணிதம், பிரயோக கணிதம் தூயகணிதம், அணுப் பெளதீகம், உயிரியல் இரசாயனம், தொழில்நுட்பவியல் எனப்பலதுறைகள், மேலும்புதிய துறைகள் உருவாகியும் வருகின்றன. அதனால் முறையியலாளர்கள் இத்துறைகளை ஒரு அடிப்படையில் வகுப்பர்.




### விஞ்ஞானம் - பொருத்தமான பிரிப்புமுறை

நியமம்கூறும் விஞ்ஞானத்தினை, உயர்நெறி விஞ்ஞானம, மதிப்பீட்டு விஞ்ஞானம், விடையீ விஞ்ஞானம், மேல்வரம்பிட்ட விஞ்ஞானம் எனவும் அழைப்பர். இதற்குள் அழகியல், ஒழுக்கவியல், அளவையியல் போன்ற துறைகள் உள்ளடங்கும். இவ்விஞ்ஞானத்துறைகள் விதிகளைக் கோட்பாடுகளை விளக்குவதோடு அதன்வழி ஒழுகுவதையும் வலியுறுத்துகின்றன. அனுபவம் சார்ந்த அறிவாகவும், சில நியமங்களை வலியுறுத்தும் அறிவாகவும் அமைகின்றது.

## வே. யுகபாலசிங்கம்

M A (Phi ) Dip in Ed

கையாள்பவனின் விருப்பு வெறுப்புக்களை சார்ந்ததாகவும் அமைகின்றன. உதாரணமாக அழகியற்துறைகளை எடுத்துக்கொண்டால்கையாள்பவனின் கற்பனை விருப்பங்கள் போன்றன அங்கு இடம்பெறுவதை அவதானிக்கலாம். தனிமனித, சமூக மதிப்பீடுகளிலும் இவை தங்கியுள்ளன.

விபரிப்பு விஞ்ஞானத்தை அனுபவ விஞ்ஞானம் விபரண விஞ்ஞானம், நேர்நிலை விஞ்ஞானம் எனவும் அழைப்பர். இதற்குள் சமூகத்துறைகளையும் இயற்கைத் துறைகளையும்உள்ளடக்கலாம்இவை உள்ளதை உள்ளவாறே விபரிப்பதாக அமைகின்றன. இவை தனிமனித சமூக அனுபவங்களைச் சார்ந்த துறைகளாகும் இவற்றின் முடிபுகள் நிகழ்திறன் வாய்ந்ததாக அமைந்திருக்கும். இயற்கை சூழல், தனிமனித நடத்தை,

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் சமூக

**விடை:**

1992 ஐ விட 1993இல் இலங்கையின் வர்த்தக வங்கிகளின் மொத்த வைப்புக்களில் தவணை, சேமிப்பு வைப்புக்களின் பங்கு அதிகரித்துள்ளன என்பதனை விளங்கி கொள்ள முடிகிறது.

**வங்கிக் கிளைகளின் பரம்பல்-1993 இறுதியில்**

| வங்கி | வங்கிகளின் எண்ணிக்கை | கிளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| வர்த்தக வங்கி | 23 | 845 |
| உ நாட்டு வ. வங்கி | 6 | 812 |
| வெளிநாட்டு வ. வங்கி | 17 | 33 |
| பிரதேசகிராமிய வங்கி | 17 | 163 |
| தேசிய சேமிப்பு வங்கி | 1 | 85 |

**வங்கி வீதம் 17%**
**நியதிச்சட்ட ஒதுக்குத்தேவை (ஒதுக்குவீதம்) அனைத்து வைப்புக்களுக்கும் 15%**

## IV

**விலைச் சுட்டெண்**

1993 (சராசரி)

| | |
|---|---|
| கொ. நு.வி. சுட்டெண் (1952=100) | 1408 |
| கொ. பெரும்பாக வி.சு (சனவரி யூன் 1989=100) | 169 |
| மொ. விற்பனை வி. சு. (1974=100) | 832 |

**பண வீக்க வீதம்**

1992இனைவிட 1993இல் சராசரி மாற்றம்

| | |
|---|---|
| கொ. நு.வி. சுட்டெண்படி | 11.7% |
| கொ பெரும்பாக நு.வி சுட்டெண்படி | 8.4% |
| மொ. விற்பனை வி. சுட்டெண்படி | 7.6% |

1991 (விசேட 92) வினா: அண்மை ஆண்டுகளில் இலங்கையின் பணவீக்கப்போக்குப்பற்றி நீர் யாது கூறுவீர்? (ஏற்கனவே வெளிவந்த ''பணவீக்கம்'' பற்றிய கட்டுரையின் தரவுகளுடன் இதனை இணைத்து விளக்கமளிக்கவும்)

மூலம்: இலங்கை மத்தியவங்கி ஆண்டறிக்கைகள் 1980 - 1993

(தொடரும்)

அடுத்தவாரம்
★ வரவு செலவுத்திட்டம் தொடர்பான தரவுகள்
★ சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி(Value Added Tax)

**அளவையியலும்**
சமூக நடத்தைகளை விளக்குந் துறைகளாகவும் இவற்றுக்கிடையிலான தொடர்புகளை ஆராயும் துறைகளாகவும் அமைகின்றன.

நியம விஞ்ஞானத்தினை வகுமுறை விஞ்ஞானம் வடிவ விஞ்ஞானம், உய்த்தறி விஞ்ஞானம் விடைய விஞ்ஞானம் என்றும் அழைப்பர். இதற்குள் கணிதமும் உய்த்தறி அளவையியலும் உள்ளடங்கும். இத்துறைகள் விதிகளைச் சார்ந்த துறைகளாகும். அனுபவத்தைச் சாராது, விதிகளைச் சார்ந்த துறைகளாக அமைவதால், அனுபவம் சாரா விஞ்ஞானம் என்றும் அழைப்பர். இத்துறைகளின் முடிபுகள் நிச்சயத்தன்மை வாய்ந்ததாக அமையும். இத்துறைகள் வடிவம் சார்ந்த அறிவியலாக அமைகின்றன வ ப்பு எ ப்புக்ளை வகுமுறையைச் சார்ந்ததாக அமைகின்றன.

இவ்வாறு விஞ்ஞானத்தைப் பிரித்து விளக்குவதே பொருத்தமானது எல்லாத்துறைகளையும் உள்ளடக்கக்கூடியவாறு இப் பிரிப்புமுறை அமைகிறது

**தூயவிஞ்ஞானம்-பிரயோக விஞ்ஞானம்**

இதேபோல் சிலமுறையியலாளர்கள் விஞ்ஞானத்தினைப் பின்வருமாறும் பிரிப்பர் i) தூயவிஞ்ஞானம், ii) பிரயோக விஞ்ஞானம். தூய விஞ்ஞானத்தினை மேலும், அனுபவவிஞ்ஞானம், அனுபவம் சாராவிஞ்ஞானம் என்றும், அனுபவ விஞ்ஞானத்தை இயற்கை விஞ்ஞானம் சமூகவிஞ்ஞானம் என்றும் பிரிப்பர். இப்பிரிப்பு முறை, இயற்கை, சமூகம், தனிமனிதன், தொடர்பான நடத்தைகளை, உறவுகளை தொடர்புகளைப் பொதுவாக விளக்குதல் என்ற தத்துவத்தில் அமைகிறது. பொதுவான கொள்கை விதி விளக்கங்களாக அமைகிறது. குறித்த துறை சார்ந்த விடய இயல்பையே ஆராய்கிறது. விபரிக்கின்றது.

பிரயோக விஞ்ஞானம் என்ற பிரிவு, பிரயோக அடிப்படையில் அமையுந் துறைகளைக் குறிக்கும், கொள்கைகளையும், விதிகளையும்பிரயோகித்து அவற்றின் ஏற்புடைமையை அராய்வதாக அமைந்திருக்கும். மருத்துவம், பொறியியல், விவசாயம், விலங்கு வேளாண்மை போன்ற துறைகள் இவ்வாறானவையாகும். இத்துறைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தூயவிஞ்ஞானங்க ு உள்ளடங்குவதாகவும் அமைந்திருக்கும். உதாரணமாக தூயவிஞ்ஞானங்களாகிய பௌதிகம், இரசாயனம், கணிதம், சமூகவியல் போன்ற துறைகள் பொறியியல் என்ற பிரயோக விஞ்ஞானத்துறையில் இடம் பெறுகின்றது. விவசாயத்துறையில், உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல், பொருளியல் போன்ற தூயவிஞ்ஞானத் துறைக ் பிரயோக ரீதியில் இடம்பெறுவதை அவதானிக்கலாம். பிரயோக விஞ்ஞானம் தூயவிஞ்ஞானத்திற்கும், தூய விஞ்ஞானம் பிரயோக விஞ்ஞானத்திற்கும் உதவுகின்றது. நவீன முறையியலாளர்கள் இவ்வாறு வேறுபடுத்துவது எந்தளவுக்கு ஏற்புடையது என விமர்சிப்பர்.

விஞ்ஞானத்தினை இயற்கை விஞ்ஞானம் சமூக விஞ்ஞானம் எனப்பிரித்து விளக்குவது, எல்லாத்துறைகளையும் உள்ளடக்கக்கூடிய பிரிப்பு முறையாகாது என முறையியலாளர்கள் சுட்டிக்காட்டுவர். உதாரணமாக கணிதம், உய்த்தறி அளவையியல் போன்ற துறைகள் அனுபவத்தைச் சாராத விதிகளைச் சார்ந்த துறைகளாகும். அதே போல், மெய்யியல் ஒழுக்கவியல் அழகியல் போன்ற துறைகளின் விடய இயல்பு, பொருளாதாரம், இரசாயனம போன்ற துறைகளின் விடய இயல்பு போன்றதல்ல. சமூக விஞ்ஞானத்துறைகள் விடையீக்குரிய துறைகள் அன்று விடையீ பற்றிய துறைகளாகும.

**இயற்கை விஞ்ஞானம் சமூக விஞ்ஞானம்**

அனுபவவிஞ்ஞானத்திற்குள் உள்ளடங்கும், இயற்கை விஞ்ஞானத்துறைகள், இயற்கை, சூழல் பற்றி அதன் இயல்பு தொடர்பு பற்றி ஆராய்கின்றன. தொழில்நுட்ப அறிவும், ஆய்வுகூடப் பரிசோதனை முறைகளும் கருவிகளும் இவ்விஞ்ஞானத்துறைகளின் வளர்ச்சிக்கு அபிவிருத்திக்கு நன்கு உதவிவருகின்றன இன்று நவீன விஞ்ஞானத்தின் வியப்புக்குரிய சாதனைகளை இயற்கைசார்ந்த துறைகளில் அவதானிக்கலாம். அளவீடுகள், அளவுத்திட்டமுறைகள் இத்துறைகளுக்கு நன்கு உதவுகின்றன. அதனால் விஞ்ஞானம் என்பதே இயற்கை சார்ந்ததுறைகள்பற்றியதுதான் என்ற பாங்கு சாதாரணமக்களிடம் காணப்படுகின்றது.

சமூகத்துறைகள் தனிமனித, சமூக நடத்தை பற்றி ஆராயுந்துறைகளாகும், இத்துறைகளின்விடய இயல்பு புறவயத்தன்மை குறைந்ததுறைகளாகஇருப்தால், இவற்றை விஞ்ஞானங்களாக ஏற்றுக் கொள்ள ஆரம்பத்தில தயக்கம் காட்டின ர்கள் காலவரையில் சமூகத்துறைகளுக்குரிய விஞ்ஞானமுறைகள் அபிவிருத்தியடைந்ததால் இத்துறைகளையும் விஞ்ஞான இயல்பு வாய்ந்த துறைகளாக அங்கீகரித்தனர். இவ்வகையில் புள்ளிவிபர முறையின் பங்களிப்பு சமூகத்துறைகளின் விஞ்ஞான இயல்புக்கு பேரளவிற்கு உதவிற்று, சமூகத்துறைகள், சார்ந்த வரலாறு உளவியல் போன்ற துறைகள் எந்தளவுக்கு விஞ்ஞான இயல்பு வாய்ந்த துறைகள் என்ற ஐயம் முறையியலாளர்களிடையே காணப்படுகின்றது இன்று இத்துறைகளின் வளர்ச்சி அபிவிருத்தி அணுகுமுறை ஆராயும் விடயம் போன்றவற்றில் பலமாற்றங்கள் நிகழ்ந்து வருவதால், இத்துறைகளும் விஞ்ஞானங்களே என ஏற்றுக் கொள்வர்.

அனுபவவிஞ்ஞானங்களில் உளவியல் வரலாறு புவியியல் போன்றதுறைகள் சமூகவிஞ்ஞானத்துறைகளாகவும் இயற்கைவிஞ்ஞானத்துறைகளாகவும்ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இரு விஞ்ஞானத்துறைகளுக்குமுரிய பண்புகள் இத்துறைகளில் காணப்படுகின்றன.

உதாரணமாக புவியியல்துறையில் இயற்கை சூழல் தொடர்பான ஆய்வுகளோடு தனிமனித சமூக நடத்தைகள் தொடர்புபடுத்தி ஆராயப்படுகின்றன. சூழல் எவ்வாறு மனிதனைப் பாதிக்கின்றது, மனிதன் எவ்வாறு சூழலைப் பாதிக்கின்றான் என்ற ஆய்வுகள் புவியற்துறையில் பல பிரிவுக உருவாக வழிவகுத்துள்ளது உளவியற்துறையும் இவ்வாறே தனிமனித சமூக நடத்தைகளையும், அகவயப், புறவயத் தொடர்புகளையும் ஆராய்கின்றது. இயற்கையோடு தொடர்பு பட்ட வாழ்முறையை, தூண்டல் துலங்கல் அடிப்படையில் உளவியல் ஆராய்கிறது. மனித உறவுகள், பண்பாடுகள், சூழல் இயற்கை போன்ற அமைவுகளோடு தொடர்பட ஆராய்கிறது அதேபோல் இத்துறைகளில் கையாளப்படும் முறைகளும், இரண்டு விஞ்ஞானத்துறைக்குமுரியதாகஅமைகிறது. இக் காரணங்களே இத்துறைகளை இயற்கைத்துறைகளாகவும் சமூகத்துறைகளாகவும் கொள்வதற்கு அடிப்படை.

நவீன விஞ்ஞான அறிவின் வளர்ச்சி, இயற்கை சமூக, ஆய்வுகளைத் தொடர்புபடுததி வருகின்றன. எவை இயற்கை விஞ்ஞானம், எவை சமூக விஞ்ஞானம் என வேறுபடுத்த முடியாதவாறு ஆய்வுப்பரப்புகள் விரிவடைவதோடு, நெருக்க மாகியும் வருகின்றன 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே, இரண்டும ஒன்றுக்கு ஒன்று உதவுந்துறைகளே என்பது நன்கு உணரப்பட்டு விட்டமையும் குறிப்பிடத்தக்கது. இத்துறைகளை விபரிப்பு விஞ்ஞானம் எனப் பிரிப்பது பொருந்தாது என்றும் கூறுவர். இவை தூயவிஞ்ஞான அறிவாகவும், பிரயோக விஞ்ஞான அறிவாகவும், தொழிற்படுகின்றன என நவீன முறையியலாளர் கூறுவர்.

## கொழும்பு பெரும்பாக நுகர்வோர்

ii) மண்ணெண்ணையின் விலை அதன் மொத்த விற்பனை விநியோகத்தில் தனியுரிமை கொண்டுள்ள பெற்றோலியக் கூ. தாபனத்தினால் அமைச்சரவையின் தீர்மானத்திற்கேற்ப நிர்ணயிக்கப்படுகிறது.

எனவேதான் கோதுமைமா பாண், மண்ணெண்ணெய் என்பவற்றின் விலைகள் **"நிருவகிக்கப்பட்ட விலைகள்"** எனப்படுகின்றன 1993 இல் இவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு ஆண்டுச் சராசரி 10.4%இற்கு அதிகரித்திருக்க வேண்டிய கொ. நு வி. சுட்டெண்ணில் 11.7% அதிகரிப்பினை ஏற்படுத்தியது).

**வினா (3)** 1992, 1991 (விசேட 92)

இலங்கையில் பணவீக்கப் போக்கினை அளவிடுவதற்குப் பயன்படுத்தும் சுட்டிகள் யாவை?

**விடை:**

1 கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (Colombo Consumer price Index C. C. P. I.)
2 கொழும்பு பெரும்பாக நுகர்வோர் வி. சு, (G C C.P.I)
3 மொத்த விற்பனை வி. சு. (Wholesale Price Index -W. P. I.)
4 உள்ளார்ந்த மொத்தநேசிய உற்பத்தி சுருக்கி (Implicit G N P Deflator)

(சில்லறை நுகர்வோர் விலைச்சுட்டெண்கள் எவை என்று கேட்கப்பட்டால் முதல் இரண்டும்மட்டும்)


புங்குடுதீவு- நயினாதீவு பல நோ.கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது)

கீழே குறிப்பிட்ட பதவிகளுக்கு

**விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

1. நிபந்தனைகளும் தகைமைகளும்:


**மகோற்சவம்**

அராலி வடக்கு மயிலியற்புலம் அருமிகு கந்தசுவாமியார் கோவில் வருடாந்த மகோற்சவம் 16-ம் திகதி வியாழக்கிழமை (16. 6. 94) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு நாட்கள் திருவிழா நடைபெறும்.

**உலர் உணவு விநியோகம்**


குழம்பாதீர்கள்! தளம்பாதீர்கள்!

வர்ணகுழம்பு வாணிபத்தில்
ஓர் மாற்றம்

**நியு ஸ்ரான்லீஸ்**

59/1, அர்ச்சுனா சாலை (ஸ்ரான்லி வீதி) யாழ்ப்பாணம்

**க. நடராஜாவும் மைந்தர்களும்**

என மாற்றமடைந்துள்ளது.

டியுகோ, டியூலக்ஸ், பென்ரலைட் வர்ணகுழம்பு வகைகளுக்கு யாழ்நகரில் உத்தரவு பெற்ற வியாபாரிகள்
க. நடராசாவும் மைந்தர்களும்
591, அர்ச்சுனா சாலை
(ஸ்ரான்லி வீதி) யாழ்ப்பாணம்.

(சி-9643)

1. நிபந்தனைகளும் தகைமைகளும்:

(அ) சங்க எல்லைப்பரப்பிற்குள் வசிப்பவருக்கு முன் உரிமை வழங்கப்படும்.

## பதவி வெற்றிடங்கள்

### (அ) பொது இலிகிதர் தரம் III

கல்வித்தகைமைகள்:- கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கமைய இருத்தல் வேண்டும்.
வயது:- 18 - 40
சம்பளத்திட்டம்:- $\frac{730 - 1055}{20\times10-25\times5}$ இதரபடிகளும்
பிணை ரொக்கம்:- 2000/-

### (ஆ) கிளைமுகாமையாளர்: தரம் III (பிடவை விற்பனையில் அனுபவமுள்ளோர்)

கல்வித்தகைமைகள்:- கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கமைய இருத்தல் வேண்டும்.
வயது:- 18-40
சம்பளத்திட்டம்:- $\frac{730 - 1055}{20\cdot15-25\cdot5}$ இதரபடிகளும்
பிணை ரொக்கம்:- 2000/- உறுதிப்பிணை:- 3000/-

### (இ) லொறி கிளீனர்

கல்வித்தகைமைகள்:- ஐந்தாம் வகுப்பு சித்தி
வயது:- 18 - 40
சம்பளத்திட்டம்:- $\frac{700 - 950}{15\times10-20\times05}$ இதரபடிகளும்
பிணைரொக்கம்:- 1000/-

### (ஈ) இரவுக் காவலாளி தற்காலிகம் (ஒருவருடம்)

கல்வித்தகைமைகள்:- ஐந்தாம் வகுப்பு சித்தி
வயது:- 18 - 40
சம்பளத்திட்டம்:- $\frac{700 - 950}{15\times10-20\times05}$ இதரபடிகளும்
பிணைரொக்கம்:- 2000/-

விண்ணப்பங்கள் யாவும் சொந்த கையெழுத்தில் பூர்த்திசெய்து 27. 06. 1994 க்கு முன் நேரில் அல்லது பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களை சங்கக் காரியாலயத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

இல.201/1,
3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

**பதில் பொதுமுகாமையாளர்.**
புங்குடுதீவு-நயினாதீவு பல நோ.கூ.சங்கம்
யாழ்ப்பாணம்.

(சி-9646)

## விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்களுக்கான வைகாசி மாத முதல் இருவாரங்களுக்குமான இலவச உலர் உணவு விநியோகம்இவ்வார இறுதிநாட்களில் வழங்கப்படவுள்ளதாக யாழ் செயலக புனர் வாழ்வுப் பகுதி தெரிவித்துள்ளது.

இதற்கான உலர் உணவுப் பொருட்களை யாழ் செயலக புனர்வாழ்வுப்பகுதி சகல பல நோ.கூ. சங்கங்களுக்கும் விநியோகித்துவருகின்றது.

இடம் பெயர்ந்தவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புதிய உலர் உணவு முத்திரைகளைச் சமர்ப்பித்து இப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இம் முறை மூன்று, நான்கு அங்கத்தவர்கள் உள்ள குடும்பங்களுக்கு ஒவ்வொருவாரங்களுக்குமாக இரண்டுவாரங்களுக்கும் இரண்டு பைக்கட் லக்ஸ்பிறே பால் மா வழங்கப்படவுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

(பா-தி)

## பனைத்தொழில்

### வல்லுநர் சந்திப்பு

பனைத்தொழில் வல்லுநர்களுக்கு இருக்கின்ற அடிப்படைப் பிரச்சினைகளை அறிந்து ஆராய்ந்து ஆவன செய்யும் நோக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் மேற்படி தொழில் வல்லுநர்களை நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடி விவரம் திரட்டி வருகின்றனர்.

இச் சந்திப்பு பனைத் தொழில் வல்லுநர்கள் வதியும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கக்கிளைகள் ரீதியாகவும், தனிப்பட்ட வகையிலும் இடம் பெற்று வருகின்றது.

# பதவி வெற்றிடம்

புங்குடுதீவு - நயினாதீவு பல நோ. கூ.சங்கம் (வரைவுள்ளது)

## பொது முகாமையாளர் தரம் III

1. கல்வித்தகைமைகள்:

அ. கூட்டுறவு வேலையாளரின் 8 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமைத்துவ/மேற்பார்வையாளர் பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு வேலையாளர் 9 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரி அல்லது சமமதிப்புள்ள தராதரமும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனத்தில் முகாமைத்துவ மட்ட பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் பயிற்சிநெறி (உயர்தரம்) தராதரப்பத்திரம்/ க.பொ.த [உயர்தரம்] தராதரப்பத்திரத்தில் 3 பாடங்களில் சித்தியும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனத்தில் முகாமைத்துவ மட்டப் பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

2. சம்பளத்திட்டம்: $\frac{1105-2170}{60\times4--75\times11}$ இதரபடிகளும்

3. வயதெல்லை: 23--50

4. பிணை ரொக்கம்: 3000/- உறுதிப்பிணை 5000/-

5. விண்ணப்ப முடிவுத்திகதி: 30-06-1994

விண்ணப்பங்கள்: **தலைவர்**
புங்குடுதீவு-நயினாதீவு பல நோ. கூ. சங்கம்
இல 201/1, 3-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல்வேண்டும்.

**தலைவர்**
புங்குடுதீவு -- நயினாதீவு பல நே கூ.சங்கம்
ய ழ்ப் ாண .

(சி-9645)

## சிந்தனைக்கு

நோக்கத்தில் பெருந்தன்மை, செயலாக்கத்தில் மனிதாபிமானம், வெற்றியில் நிதானம் எனும் மூன்று பண்புகளைக் கொண்டு சிறந்த மனிதனை இனம் காணலாம்.

- பிஸ்மார்க்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 13-06-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண். 05

## என்றும் வாழ்வார்

தமிழ் மண்ணின் மீதும், மக்கள் மீதும் ஆழ்ந்த பற்றுக்கொண்ட கல்விமானாகிய பேராசிரியர் துரைராசா காலமானது தமிழீழ மக்களைப் பொறுத்து ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என்பதில் இரண்டாம் கேள்விக்கே இடமில்லை.

பேராசிரியர் துரைராசா நெருக்கடியான காலகட்டத்தில், பல இன்னல்களின் மத்தியில் தமிழ் மாணவர்களின் கல்விக்கு ஆற்றிய சேவையானது அவர் தமிழ் மக்களின் மீதும் அவர்களின் கல்வியின் மீதும் கொண்டுள்ள பற்றுதலை வெளிப்படுத்துபவையாகும்.

பேராசிரியர் துரைராசா, தமிழ்மக்களின் கல்வி மாத்திரமல்ல, அவர்களின் அரசியல் உரிமைகள் தொடர்பான விடயத்திலும் தெளிவாகவே இருந்தார். தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டும்; அவர்களின் தாயகம் காக்கப்பட வேண்டும் என்பதிலும் உறுதியாகவே இருந்தார். இதனை வெளிப்படையாகவும் பகிரங்கப்படுத்தியிருந்தார். தமிழ் மக்களின் உரிமை பற்றிப் பேசுவதற்கு அவர் என்றுமே தயக்கம் காட்டியதில்லை.

பேராசிரியர் துரைராசாவின் கல்வித்தகைமையும் ஆற்றலும் உலகின் எப்பகுதியிலும் வாழக்கூடிய வாய்ப்பை அவருக்கு வழங்கியிருந்தது. ஆனால் தாம் பெற்ற கல்வியானது ஓரளவாவது தமது மண்ணிற்கும் மக்களுக்கும் பயன்படவேண்டும் என்பதில் அவர் அக்கறை கொண்டிருந்தார். தாயக மண்ணிற்குச் சேவை செய்யாமை ஒரு வகையில் துரோகமானது என்றே அவர் கருதினார்.

இதன் காரணமாகத்தான் பெரும் நெருக்கடி வேளையிலும், தம் தாயக மண்ணிற்குச் சேவை செய்வதில் குறியாக இருந்தார். பல இன்னல்களின் மத்தியிலும் பல்கலைக்கழகத்தில் எந்தவித குழப்பமும் ஏற்படாமல் அதனை வழிநடத்திச் சென்றார். அதேசமயம் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கும், பெரும் பங்காற்றினார். புதிய பீடங்களையும், கற்கை நெறிகளையும் தொடங்குவதற்கு தீவிர முயற்சிகளில் ஈடுபட்டதோடு, உலக பல்கலைக்கழகங்களுடனும் தொடர்புகளை ஏற்ப

# பேராசிரியர் துரைராசா ஆற்றிய சேவைக்கு ஈழத்தமிழ் உலகம் என்றும் கடமைப்பட்டது

### தேசியத்தலைவர் வே. பிரபாகரன்

சான்றோரைப் போற்றுவதும், கற்றோரை கௌரவிப்பதும் தமிழர்களாகிய எமது மரபு. எமது சீரிய பண்பாடு. இந்த பண்புக்கமைய பேராசிரியர் துரைராசா அவர்களை பாராட்டிக் கௌரவிப்பதற்காக நாம் இங்கு கூடியிருக்கின்றோம்.

பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு தலைசிறந்த கல்விமான். உலகப் புகழீட்டிய அறிஞர். ஆறு ஆண்டுகளாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக பதவியிலிருந்து அவர் எமது மண்ணுக்கு ஆற்றிய சேவை மகத்தானது. அதற்காக ஈழத்தமிழ் உலகம் அவருக்கு என்றும் கடமைப்பட்டிருக்கும்.

**கடந்த 3.4.94. அன்று பேராசிரியர் துரைராசாவுக்கு வழங்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் பேராசிரியருக்கு விடைபெட விருந்து வழங்கி ஆற்றிய உரையை இங்கு தருகிறோம்.**

பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு தேசப்பற்றாளர். அவர் இந்த மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்தார். அவரது வாழ்க்கை இந்த மண்ணோடு பிணைந்தது. மக்களோடு இணைந்தது. அவர் இந்த மண்ணினதும் மக்களினதும் போராட்ட வாழ்வுடன் ஒன்றிணைந்து நின்றார். போராட்ட வாழ்வின் பளுக்களை சுமந்து கொண்டார். போராடும் மக்களின் துன்பங்களை பகிர்ந்து கொண்டார்.

எத்தனையோ அவலங்கள், துன்பங்கள் மத்தியிலும் எதற்கும் அஞ்சாத துணிவுடன் இந்த மண்ணைப்பற்றி நிற்கும் எமது மக்களுக்கு பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு ஊக்க சக்தியாக விளங்கினார். தளர்ந்து போகாத உறுதிப் பாட்டிற்கு ஒரு உன்னத உதாரணமாக விளங்கினார்.

எமது இனத்தின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் கல்வி ஆதாரமானது. எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அடித்தளமானது. நீண்ட காலமாகவே எமது கல்விவாழ்வை சிதைத்து விட எதிரியானவன் முனைந்து வருகிறான். இதனால் தமிழரின் கல்வி பாரதூரமான அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கின்றது.

சரிந்து கொண்டிருக்கும் எமது கல்வித் துறையை நிமிர்த்தி விட வேண்டும் என்ற இலக்கில் பேராசிரியர் துரைராசா அவர்கள் அரும் பாடுபட்டார். எத்தனையோ இடையூறுகளுக்கு



தலைவர் பிரபாகரன் பேராசிரியருக்கு விருது வழங்குகிறார்

மத்தியில் துணிந்து செயலாற்றினார். எதிரியின் போர் அழுத்தங்களாலும் அனர்த்தங்களாலும் யாழ்ப்பாண உயர் கல்விப்பீடம் செயலிழந்து போகாத வண்ணம் அவர் ஆற்றிய அருந்தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது. இது அவரது தேசப்பற்றிற்கும் மக்கள் நேயத்திற்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

பேராசிரியர் துரைராசா ஒரு எளிமையான மனிதர். ஒரு இனிமையான மனிதர். எளிமையும் இனிமையும் இணைந்த ஓர் நல்ல மனிதர்,

அறிவின் அதியுயர்ந்த பண்பாக பிறப்பது தான் எளிமை. தன்னலமும், தற்பெருமையும், அகன்ற நற்பண்பாக எளிமை தோன்றுகிறது. இந்த எளிமை ஒருவரை அழகான மனிதராக பண்பான மனிதராக ஆக்கிவிடுகிறது. இந்த வகையில் பேராசிரியர் துரைராசா ஒரு அழகான மனிதர். அவரிடமுள்ள இந்த அகத்தின் அழகுதான் மக்களை கவரும் மாபெரும் சக்தியாக விளங்குகிறது



எடுபிடி

எதுவுமற்ற

எளிமையே!

போய்விட்டாயா?

-புதுவை இரத்தினதுரை

## குருநகர் பகுதி

வாழும் குடியிருப்புகளில் வீழ்ந்து வெடித்ததில் அம் மக்கள் மத்தியில் பீதி நிலை ஏற்பட்டுள்ளது. பல மக்கள் குடும்பம் குடும்பமாக இடம் பெயர்ந்து பாதுகாப்பு கருதி வேறிடங்களில் சென்று தங்கியுள்ளனர்.

மேலும் பலர், தேவாலயங்களில் சென்று தங்கியுள்ளனர். (தி, பா)

## குருநகர்

## மனிதநேயம்

அச் செய்தி கீழே தரப்படுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகத் துணைவேந்தராகப் பணிபுரிந்து நமது பெருமதிப்பையும் பேரன்பையும் பெற்றுப் பின்னர் நம்மை விட்டுப் பிரிந்து கொழும்பிற்குச் சென்ற பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியும் துயரமும் அடைந்

மதி பெறாதவர்களுக்கு கல்வியைபுகட்ட உருவாக்கப்பட்ட தொழிலாளர் கல்வி புறநிலப்படிப்பு அலகு, வெளிவாரிப்பட்டப்படிப்பு ஆகியவற்றைப் முன்னின்று ஊக்குவித்தார்.

ஒரு பல்கலைக்கழகத்திற்கு மேன்மை தருவது வெறும் சட்டடங்களும் கற்கை நெறிகளுமல்ல என நம்பிய இவர் தமது ஆளுமையைப் பயன்படுத்தி பல்கலைக்கழக ஆய்வுகளும்

தொடங்குவதற்கு தீவிர முயற்சிகளில் ஈடுபட்டதோடு, உலக பல்கலைக்கழகங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தினார். மேலும் மாணவர் நலனிலும் பெரும் அக்கறை காட்டினார்.

இதேசமயம் தான் படும் இன்னல்கள், நெருக்கடிகள் பற்றி அவர் அலட்டிக் கொண்டதாகவோ அன்றி துன்பப்பட்டதாகவோ தெரியவில்லை. பேராசிரியர் துரைராசா விரும்பியிருப்பின், இங்கு வாழ்ந்திருப்பினும்கூட, இந் நெருக்கடியிலும் ஓரளவேனும் வசதியாக வாழ்ந்திருக்க முடியும். ஆனால் அவர் அதனை விரும்பவில்லை. மக்களோடு மக்களாக அவர் வாழ விரும்பினார். அவ்வாறே வாழ்ந்தும் காட்டினார்.

தமிழ்மக்களின் யுத்தகால வாகனமாக துவிச்சக்கர வண்டி மாறியது போது, அவரது வாகனமும் துவிச்சக்கரவண்டியாக மாறியது. தனது கல்விப் பயணம் தொடர அவர் தினமும் பல மைல்கள் துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்தார். தமிழ்மக்களின் போக்குவரத்துப் பாதையாக ஆபத்து நிறைந்த 'கிளாலிப்பாதை' மாறிய போது அவரது பாதையும் கிளாலிப் பாதையாகவே மாறியது. இதன் மூலம் பேராசிரியர் துரைராசா தனது வாய்ப்புக்களை மட்டுமல்ல, தனக்கு இங்கு கிடைக்கக்கூடிய அடிப்படை வசதிகளைக் கூடத் துறந்தார். அந்தளவிற்கு எளிமையானவராக வாழ்ந்தார்.

இந்தவகையில், தேசியத்தலைவர் பிரபாகரன் பேராசிரியருக்கு விருது வழங்கிக் கௌரவித்தமையும், அவர் குறித்து தெரிவித்த புகழாரமும் பொருத்தப்பாடுடையதே. "பேராசிரியர் துரைராசா சிறந்த கல்விமான். உலகப் புகழ் ஈட்டிய அறிஞர். ஆறு ஆண்டுகளாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராகப் பதவியிலிருந்து அவர் மண்ணிற்கு ஆற்றிய சேவை மகத்தானது. அதற்காக ஈழத்தமிழ் உலகம் அவருக்கு என்றும் கடமைப்பட்டிருக்கின்றது" எனத் தலைவர் தனது பாராட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

தலைவர் பிரபாகரனின் கூற்றைப் போன்றே தமிழ் மக்கள் அனைவரும் அவரை நேசித்தார்கள். அவர் துணைவேந்தர் பதவி விலகிச் சென்ற போது தமிழ் மக்கள் அவருக்கு செலுத்திய பாராட்டு விழாக்களும், கௌரவிப்பும் தமிழ் மக்கள் மனதில் அவர் பெற்றிருந்த பெருமதிப்பைக் காட்டியது.

இவ்வாறானதொரு பேராசிரியரை தமிழ்மக்கள் தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் இழந்துள்ளனர். இவ்வாறானதொரு தேசப்பற்றாளனின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. ஆனால் இறக்கும் வரை தமிழ் மண்ணையும், மக்களையும் நேசித்த அவர், தமிழ்மக்களின் உள்ளங்களில் என்றும் வாழ்வார் என்பது நிச்சயம்.



-புதுவை இரத்தினதுரை

நெடிய உன் உடலும்; வெள்ளை
நெஞ்சுடன் விரிந்த நோக்கும்
அடிமுடி அறியா உந்தன்
அறிவுடன் உழைப்பும்; எங்கள்
விடிவுக்கான போரில்
விருப்புடன் இணைவும் கொண்ட
எடுபிடி எதுவும் அற்ற
எளிமையே! போய்விட்டாயா?

★

தீயவை தீண்டா நெஞ்சே
தீமைக்கும் தீங்கு செய்யா
நாயகா! உன்னால் நாங்கள்
நல்லன பெற்றோம்; எம்மைத்
தாயென அணைத்துக் காத்து
தழுவிய காற்றே! உன்னைப்
போய்வரத் தானே விட்டோம்.
போய்விட்டாய். வரமாட்டாயா?

★

ஆற்றலும் அறிவும் பெற்ற
ஐயனே! உனக்கும் சாவா?
போற்றுதற் குரிய உந்தன்
பொன்னுடல் மீதும் தீயா?
நேற்று இங்கிருந்தாய்; இன்று
நோயினால் மடிந்தாய்; உன்னைக்
கூற்றுவன் என்ன செய்தான்?
கொன்றனன்; எனிலும் வாழ்வாய்.

★

பேர்துரை ராசா என்று
பெரியது; துணைவேந் தென்று
நீயிருந் தரசு செய்து
நின்றதும் பெரிது; உன்னை
ஆர்வணங் காதார் இன்று
அத்தனை பேரின் கண்ணும்
நீர்வழிந் தோட மூச்சை
நிறுத்தியேன் துயிலு கின்றாய்.

★

குருதியில் குளிக்கும் மண்ணில்
குருவியாய் திரிந்தாய்; சொந்தத்
தெருவினில் நடந்தாய்; எங்கள்
"தேசியத் தலைவன்" கையால்
விருதினைப் பெற்றாய் அன்று
விருந்திலும் கலந்தாய்; நாங்கள்
வருந்திடத் துக்க இன்று
வாசலிற் கிடக்கின் றாயே.

## குருநகர்

மக்கள் காயமடைந்தனர் இவர்களுள் யாழ் போதனா மருத்துவ மனையில் 18 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் காயமடைந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு

குமாரசாமி இராசரத்தினம் (வயது 49) நாவலர் வீதி, யாழ்ப்பாணம், சின்னத்தம்பி செல்வநாயகம் (வயது 40) கோப்பாய், சதாசிவம் இராமையா (வயது 48) டேவிட் வீதி யாழ்ப்பாணம், கி. சதீஸ்குமார் (வயது 17) தொடர்மாடி குருநகர், சண்முகம் துரைசிங்கம் (வயது 38) உரும்பராய் மேற்கு, உரும்பராய், ஆறுமுகம் தம்பிராசா (வயது 52) வட்டுக்கோட்டை தெற்கு, சின்னத்துரை மகாலிங்கம் (வயது 43) வசந்தன் வீதி சண்டிலிப்பாய், இராயப்பு மரியநாயகம் (வயது 60) 22, கடற்கரை வீதி குருநகர், அந்தோனிப்பிள்ளை சின்னத்துரை (வயது 41) ஆனைக்கோட்டை, சின்னட்டியன் முருகேசன் (வயது 52) வட்டுக்கோட்டை, இம்மனுவல் சிப்பரோஸ் (வயது 68) தண்ணீர் தாங்கி குருநகர், ஜே ஜான்ஸ்போல் (வயது 11) மவுண்கார்மல் வீதி யாழ்ப்பாணம், ஆர். மயில்வாகனம் (வயது 52) கலட்டி லேன் கொண்டாவில், இ. மானியல் (வயது 40) அரியாலை சாம்சன் முகாம், இ. செபஸ்ரியன் (வயது 24) தொடர்மாடி குருநகர், முத்தன் கிருஷ்ணபிள்ளை (வயது 40) கோப்பாய், சின்னட்டி மகான் (வயது 40) சண்டிலிப்பாய், றாபட் ரணி (வயது 49) யாழ்ப்பாணம்.

இதேவேளை காயமடைந்த பலர் சிகிச்சையின் பின் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் சிறுசிறு காயங்களுக்குள்ளாகி யாழ், போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவிலும் தனியார் மருத்துவ மனைகளிலும் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

(ச, சி, 21)

களின் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியும் துயரமும் அடைந்துள்ளோம். இவ்வளவு விரைவாக அவருக்கு மரணம் சம்பவிக்குமென்று நாம் நினைத்துக் கூடப்பார்க்கவில்லை.

பேராசிரியர் துரைராசா அவர்கள் நமது சமுதாயத்தின் மிக நெருக்கடியான காலகட்டத்தில் துணைவேந்தர் பதவியை ஏற்று மிகவும் நிதானமாகவும் திறமையுடனும் தமது பணியை மேற்கொண்டு புகழீட்டியவர் அவரின் புகழுக்கு அவர் கொழும்புக்கு மாறலாகிச் சென்ற பொழுது எமது பிராந்தியத்தில் அளிக்கப்பட்ட பிரிவு உபசார நிகழ்ச்சிகளே உரை கல்லாக அமைகின்றன. துணைவேந்தராகக் கடமையாற்றிய காலகட்டத்தில் தமது கடமையில் தமது முழுப் பொழுதையும் ஈடுபடுத்தியது மட்டுமன்றி ஏனைய பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கு அளிக்கப்பட்டவை போன்ற வசதிகளைக் கூடப் பயன்படுத்தாது தமது மக்களுடைய வசதியீனங்களிலே தாமும் பங்கெடுக்க வேண்டுமென்று மிகவும் ஆணித்தரமாக நம்பியவர்.

இவரது பதவிக் காலத்தில் நமது பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்காகப் பல புதியதிட்டங்கள் முன்வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தவும் பட்டன. இவர் தொடக்கிவைத்த த்தகல்வி நெறிமுறைகள் இப்பல்கலைக்கழக வளர்ச்சியில் இவருக்கிருந்த கரிசனையைத் துலாம்பரப்படுத்துகின்றன பல்வேறு தடங்கல்களுக்கும் சிரமங்களுக்கும் மத்தியில் கிளிநொச்சியில் விவசாய பீடம்தனித்துவமாக வளர்ச்சி காண்பதற்கு இவர் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது இவ்வாறே நமது பல்கலைக்கழகத்தில் பொறியியற் பீடமொன்றையும் நமது கடல் வளத்தைப் பயன் படுத்தற்கென ஒரு தனியான பீடமொன்றையும் அமைக்க அவர் வேண்டிய முன்முயற்சிகள்செய்துகொண்டிருந்தார் திருநெல்வேலி வளாகத்தில் நமது மக்களுக்கு குறிப்பாக பல்கலைகழகங்களுக்கு அறு

மையைப் பயன்படுத்தி பல்கலைக்கழக ஆய்வுகளும் வெளியீடுகளும் சிறப்பான இடத்தினைப் பெறுவதற்கு வழிசமைத்தார். அதுமட்டுமன்றி நமது அறிஞர்கள் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து அங்குசென்று ஆய்வு நடாத்தவும் பட்டம்பெற்றுவரவும் இவர் பெரும் முயற்சிகள் எடுத்தார். இம் முயற்சிகளின் கனிவுதான் யாழ்ப்பாண பல்கலைக்கழக - சுவீடன் பல்கலைக்கழகக் கூட்டு ஆய்வுத் திட்டமும் தற்பொழுது கையெழுத்தாகியுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக-நோர்வே பல்கலைக்கழக கூட்டு ஆய்வுத்திட்டமுமாகும். மாணவர்களின் நலனையே முழுமுதல் நோக்கமாகக் கொண்ட துணைவேந்தர் நல் நிதியம் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிமாணவர்களின் இடர்களைக்களைவதற்கு அவர் ஆற்றிய பங்களிப்பு என்றும் நினைவு கூரத்தக்கவை. அவர் இங்கு பணியாற்ற வந்த பின்பே பல்கலைக்கழக விளையாட்டுத் துறை மிகத் துரிதமாக வளர்ச்சி கண்டது.

பேராசிரியர் துரைராசா பல்கலைக்கழகத்தை மட்டுமே மையமாகக் கொண்டு செயலாற்றவில்லை. நமது சமுதாயம் பற்றியும் அதன் எதிர்காலம் பற்றியும் அக்கறை கொண்டு சமூகவளர்ச்சிக்கு வேண்டிய பல சங்கங்களையும், தாபனங்களையும், குழுக்களையும் உருவாக்கி அவற்றைத் தானே முன்னின்று வழி நடத்தினார். யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், ஊற்று நிறுவனம் போன்றவை இவற்றிற்குச் சில உதாரணங்களாகும். எளிமையான தோற்றம் எல்லோருடனும் அன்பாகப் பழகும் சுபாவம், நலிந்தவர்களின் மேம்பாட்டில் காட்டும் அக்கறை, தனது சொந்தச் சுகத்திற்கு மேலாக சமூகப் பணியையே மேலாகக் கருதும் அர்ப்பணிப்பு மனப்பான்மை போன்ற குணாதிசயங்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிறந்த நாள் வாழ்த்து
( 13 - 06 - 1994 )



செல்வன்
### லிங்கரெட்னம் சுமந்தரன்

லிங்கரெட்னம் - லீலாவதி தம்பதியரின் செல்வப் புதல்வன் ''சுமந்தரன்'' தனது முதலாவது பிறந்த நாளை 13 - 06 - 94 இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார்.

''சுமந்தரனை'' அன்புஅப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தி, சித்தப்பா, அக்காமார், அண்ணன்மார், மச்சாளமார், மச்சான்மார், மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் எல்லாம் வல்ல வசந்தபுரம் வசந்தநாகபூசணி அம்மன் துணை கொண்டு பல செல்வங்களும் பெற்று பல்லாண்டுகாலம் நீடூழி வாழவென வாழ்த்துகிறார்கள்.

க. லிங்கரெட்னம்

16, கனகசபை அவனியூ
யாழ்ப்பாணம். (8520)

## யாழ். வணிகர் கழகம் விடுக்கும்
## முக்கிய அறிவித்தல்

இம்மாதம் 6ஆம் திகதி காலை இறைபதம் எய்திய யாழ். கேணல் கிட்டுசாலை [மருத்துவமனை வீதி] இல் அமைந்துள்ள ''கொ. க. ஆ. கந்தையாப்பிள்ளை'' வணிக நிலைய உரிமையாளரும், முன்னாள் வணிகர் கழகத் தலைவருமான திரு. க. நடராசா அவர்களின் ஈமக்கிரியைகள் 13-06-94 திங்கள் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதால் வணிகப் பெருமக்கள் மற்றும் அனைவரும் அன்னாருக்கு இறுதி அஞ்சலியை தெரிவிக்கும் வண்ணம் அன்று யாழ். நகரிலுள்ள சகல வணிக நிலையங்களும் மூடப்பட்டிருக்குமென தெரிவித்துக்கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்,
(சி-9655) யாழ். வணிகர் கழகம்.

## முக்கிய அறிவித்தல்

### மனிதநேயம்

அவர் மேல் மற்றவர்களின் அன்பையும், ஆதரவையும் ஈர்த்தன.

தலைசிறந்த கல்விமானும் மனித நேயம் மிக்க ஒரு சமூக சேவையாளருமான அன்னாரின் மறைவு யாழ். பல்கலைக் கழகத்திற்கு மட்டுமன்றி தமிழ்ச் சமுதாயம் முழுவதற்குமே ஒரு பேரிழப்பாகும். இத் துன்ப வேளையில் துயருறும் அவரது துணைவியார் பிள்ளைகள் ஆகியோருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களது துயரத்தில் நாமும் அவர்களோடு இணைந்து அவர்களின் துன்பத்தினைப் பகிர்ந்து கொள்கிறோம். பேராசிரியர் துரைராசாவின் ஆன்மா இறைவனின் திருவடிகளில் இணைய இறைஞ்சுவோமாக.

## யாழ். ஸ்ரீதரில்

புரூஸ்லி நடித்த
GAME OF DEATH
தினசரி
பிற்பகல் 4.00மணி 6.00மணி
சனி ஞாயிறு
காலை 10. 30 மணி
பிற்பகல் 4.00 மணி 6.00மணி
(சி- 9570)

### விநாயக புரத்தில்

இம் மோதலின் பின்னர் அங்கு விசேட அதிரடிப்படையினர் மூன்று பொதுமக்களை சுட்டுக் கொன்றதுடன் வீடொன்றையும் எரித்துவிட்டுச் சென்றனர்.

### யாழ். தபாலில்

நாட்டிலிருந்து யாழ். குடாநாட்டு வாசி ஒருவருக்கு வந்த கரன்சி நோட்டுகளை தமக்குள் பிரித்து எடுத்துக் கொண்ட நடவடிக்கை அம்பலத்திறகு வந்ததையடுத்து இச்சோதனைகள் இடைநிறுத்தப்பட்டதாக தெரியவருகிறது.

மேற்படி பணநோட்டுக்கள் காவல் ஊழியர்களால் கையாடப்பட்டதை கண்ட தபால் தரம்பிரிக்கும் ஊழியர் ஒருவர் இதை உயரதிகாரியின் கவனத்திற்கு கொண்டுவரவே விசாரணை நடத்தப்பட்டு அந்தக் காவலர்கள் கைது செய்யப்பட்டனர் இதையடுத்து சோதனை நடவடிக்கையில் காவல் படையினரை விலக்குமாறு அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்தது தொடர்பாக ஒரு முடிவு எடுக்கப்படும்வரை சோதனை நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன.

யாழ். செல்லும் தபால் பொதிகள் இங்கு வைத்தே படையினராலும் சோதனையிடப்படுவது வழக்கமாகும்.

## உழைத்து வாழும் உயர்ந்த மனிதன்
## விலைக்குத் தன்னை விற்றிட விரும்பான்

### மக்களோடு

இச் செய்தியில்; உலகம் போற்றும் கல்விமானும், தன் சுக போகங்களை மறந்து தேசப்பற்றுடன் சேவையாற்றிய பெருமகனும், கல்வித் துறையை வளர்க்க என்றே தன் வாழ் நாட்களை அர்ப்பணித்த உத்தம பண்பாளனும். எமது பல்கலைக் கழகத்தின் முன்னைநாள் துணைவேந்தருமாகிய பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் மறைவுச் செய்தியைக் கேட்டு பேரதிர்ச்சியடைந்ததோடு ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளோம்.

இவரின் இழப்பு மாணவர் சமுதாயத்திற்கும் தமிழ் சமுதாயத்திற்கும் பேரிழப்பாகும் அன்னாரின் இழப்பால் துன்புறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994 - 06 - 13
### திங்கள் இரவு

08. 01 - தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08. 20 - செய்திச்சரம்
08. 30 - செய்திகள்
08. 40 - சிங்களம் - அரசகரும மொழியாக்கப்பட்டதன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''பிரிவினைக்கு தூண்டியவர்''

### 1994 - 06 - 14
### செவ்வாய் காலை

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - இன்றைய தாரகை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - தாயகப் பாடல்கள்.

### மக்கள்

ஈழத்தில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். எல்லோர் உள்ளங்களையும்கவர்ந்து வாழ்ந்த மாமனிதர்யாம் அவர்க்காற்றும்கைம்மாறு எதுவெனினும் நிறைவுறாது. அன்னாரின் ஜீவாத்மா, நித்தியானந்தசாந்திநிலை எய்த வேண்டுமென நாமெல்லோரும் இறைவன் திருவருளை உளமார வேண்டி, மனமாரப் பிரார்த்திப்போமாக.

### பேராசிரியர்

பட்ட எதிர்பாராத ஈடிணையற்ற பேரிழப்பாகும். மனம், நினைவு, சொல், செயல் அனைத்திலுமே தூய்மையும், வீரமும், தீரமும் நிறைந்த அவரின் சேவை மக்கள் மத்தியில் மாணிக்கமாய் அவரை உயர்த்தி நின்றது. இறப்பு இயற்கை நியதி என்றாலும் கூட அவரின் மறைவை நாம் எவரும் இவ்வளவு விரைவில் எதிர்பார்க்கவில்லை, அவர் காலத்துக்கேற்ப முன்னின்று செய்த சமூகமேம்பாடுகள் காலத்தாலோ அவரின் இறப்பாலோ அழியாது. அவர் பூத உடல் மறைந்தாலும் புகழுடம்பு தமிழர் உள்ளளவும் நிலைத்திருக்கும். அவரின் மறைவுக்கு எனதும் எங்கள் மாவட்ட செயலகத்தினரதும் ஆழ்ந்த அனுதாபத்தை மிக மனவருத்தத்துடன் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

### இறுதிச்சடங்கு

கழகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் பின் இக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

துணைவேந்தர் குணரட்ணம் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் இக்குழுவினர் பேராசிரியர் துரைராசாவின் இறுதிச் சடங்குகள் மற்றும் அஞ்சலிக் கூட்டம், இறுதி ஊர்வலம் ஆகியன தொடர்பான ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறது.

மேற்படி நடவடிக்கைகளை இக்குழுவினர் நேற்றே ஆரம்பித்துவிட்டனர். இக்குழுவினர் இன்று 11-00 மணியளவில் கூடிபேராசிரியரின் இறுதி நிகழ்வுகள் குறித்து ஆராயவுள்ளனர். (க), (நி)

### தூரதரிசனத்துடன்

மக்களின் நலனையும் உயர்வையும் வளர்ச்சியையும் மனதில் கொண்டு எமது ஆயர் இல்லத்தை அலுவல் மையமாகக்கொண்டு இயங்கிய பிரஜைகள் குழுவில் தளராத உறுதியுடனும் நிதானமான சிந்தனையுடனும் பங்கெடுத்துப் பணிபுரிந்தவர். தமிழினம் இன்னலுற்று இருக்கும் இவ்வேளையில் மண்ணையும் மக்களையும் மனதார நேசித்த இந்த மாமனிதனின் மரணம் தமிழினத்துக்கு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்.

இவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை கூறிக்கொள்ளும் இவ்வேளை அன்னாரின்ஆன்மா ஆண்டவரின் சந்நிதியில் ஆறுதல் அடையவேண்டும் என்று இறைவனை இரந்து மன்றாடுகிறோம்.

### இரவு பகல்

கணக்கானோரில் நானும் ஒருவன். அந்தப் பெருமகனுடைய மறைவினைத் தனியொரு மனிதனுடைய மறைவாகக் கொள்ள முடியாது. இவருடைய மறைவு எம் பிரதேசத்தைக் கட்டி எழுப்பும் உத்வேகம் கொண்ட எம் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இப் பெரியார் கண்ட கனவுகளை நனவாக்குவதே நாம் அவருக்குச் செய்யக்கூடியகைம்மாறாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறேன். ஓம் சாந்தி! என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழ் கூறும்

ழப்பாகும் என்று பேராசிரியர் அ. துரைராசாவின் மறைவுக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஆழ்ந்த கவலையையும் வேதனையையும் வெளியிட்டுள்ளது.

எமது தேசத்தின் சொத்தான அமரர் அ. துரைராசா அவர்கள் எமது தேசத்தை நிர்மாணிக்க பெரும் அவா கொண்டிருந்தார். இக் கல்விமானது மறைவுக்கு நாம் உரிய அஞ்சலியை செலுத்துவோம். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். வணிகர் கழகத்தின்
முன்னை நாள் தலைவர்
## திரு. ஆ. க. நடராசா அவர்கட்கு
## எமது இதய அஞ்சலி

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், நண்பர்க்கும், வர்த்தக பெருமக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து அவரது ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

எழிலகம் -- சுவையருவி
(சி-9658) யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்



## முக்கிய அறிவித்தல்

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

**யாழ். மாவட்டம்**

யாழ். மாவட்ட தலைவர், பொருளாளர், உட்பட நிர்வாகசபை உறுப்பினர்கள். மற்றும், யாழ். கோட்டம், வடமராட்சிக் கோட்டம், தென்மராட்சிக் கோட்டம் ஆகியவற்றின் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட நிர்வாக சபை உறுப்பினர்களையும் இன்று 13-06 94 திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நல்லூர் தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.

(9657)

---

## ஐந்தாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



மலர்வு :

13 - 01 - 1967

உதிர்வு :

13 - 06 - 1989

## செல்வன் சவிரிமுத்து நியூமன்

ஐந்தாண்டு சென்றதைய்யா எமதில்லம் இருண்டதைய்யா
உமை நினைக்கும் போதிலே எமதுள்ளம் துடிக்குதைய்யா
ஆறாத்துயரில் எமை ஆழ்த்திவிட்டு நீர் மட்டும் மீளாத்
துயில் கொள்ளச் சென்றதெங்கே.


இவரின் பிரிவால் துயருறும்,

தாய், தந்தை, சகோதரிகள்,
மருமக்கள், மாமன்மார், மாமிமார்,
அன்ரிமார், அன்ரிஐயாமார்,
மைத்துனர், மைத்துனிகள்,
அம்மம்மா.

12/2, மடம்வீதி,
யாழ்ப்பாணம்.

(8534)

---



## ஆ. க. நடராசா (K. K. A. K.)

காரைநகரை பிறப்பிடமாகவும், நல்லூர் வைமன் வீதியில் வசித்தவரும், யாழ்ப்பாணம் கிட்டு சாலை (மருத்துவமனை வீதி) இல 316, கொ. க. ஆ. கந்தையாபிள்ளை வணிக நிலைய உரிமையாளரும் முன்னாள் யாழ். வணிகர் கழக தலைவருமாகிய ஆ. க. நடராசா அவர்கள் 06-06-1994இல் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற பிரபல வணிகர் கொ. க. ஆ. கந்தையாபிள்ளை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், ஞானகலையின் அன்புக் கணவரும், திலகவதி (கனடா), தங்கேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசோதியின் (கனடா) மாமனாரும் ஐதுஷன் (னடா) வரோணிக்கா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற பரமசிவம்பிள்ளை (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கந்தசாமியின் (J. P.) மைத்துனரும், காலஞ்சென்ற இராசலிங்கம், பரிபூரணம் ஆகியோரின் மருமகனும் ஆவார். அன்னாரது பூதவுடல் இன்று 13-06-94 காலை 10 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தங்கேஸ்வரன்
(மகன்)

இல. 26, வைமன் வீதி,
நல்லூர், (ஈழநாதம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

(8541)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


---

அமரத்துவமடைந்த

### பேராசிரியர் அ. துரைராசா

அவர்களுக்கு

## இதய அஞ்சலி



ஹாட்லிக் கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவர்களில் ஒருவரும் அகிலம் போற்றும் விஞ்ஞானியும் தனைலம் கருதாது பொதுவாக தன்னையீன்ற மண்ணுக்கும், சிறப்பாக கல்வியுலகுக்கும் குறிப்பாக ஹாட்லிக் கல்லூரியின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் அரும்பணியாற்றி தன் இன்னுயிரையே அர்ப்பணித்த

சேவை நாயகன்

மனிதத் தெய்வம்

**அமரர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களுக்கு**

எங்கள் இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலிகள்

ஹாட்லிக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர், ஊழியர்,
மாணவர், பழைய மாணவர், கல்லூரி அபிவிருத்திச் சபையினர்

(சி-9656)